
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி
சமய மாத இதழ்
ஜூன் 2024,
விலை ரூ.20/-
SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:11, Pages:56
JUNE-2024, Price Rs.20/-
திருமலையப்ப ஸ்வாமி
ஜ்யேஷ்டாபிஷேக மஹோத்ஸவம்
2024 ஜூன் 19 முதல் 21 வரை



## அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கேடஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் 2024 ஜூன் 17 முதல் 25 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 16-06-2024 | ஞாயிறு | ---- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 17-06-2024 | திங்கள் | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 18-06-2024 | செவ்வாய் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 19-06-2024 | புதன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 20-06-2024 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 21-06-2024 | வெள்ளி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 22-06-2024 | சனி | ஹனுமத் வாகனம், மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 23-06-2024 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 24-06-2024 | திங்கள் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 25-06-2024 | செவ்வாய் | சக்கர ஸ்நானம் | துவஜாவரோஹணம் |



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்

| | | |
|---|---|---|
| 17-06-2024 | திங்கள் | ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமிக்கு |
| 18-06-2024 | செவ்வாய் | ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமிக்கு |
| 19-06-2024 | புதன் | ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு |
| 20-06-2024 | வியாழன் | ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு |
| 21-06-2024 | வெள்ளி | ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு |




தே$_3$ஹிநோடஸ்மிந் யத$_2$ா தே$_3$ஹே
கௌமாரம் யௌவநம் ஜரா ।
தத$_2$ா தே$_3$ஹாந்தரப்ராப்திர் -
தீ$_4$ரஸ்தத்ர ந முஹ்யதி ॥

எப்படி ஜீவாத்மாவுக்கு இந்த உடலில் இளமையும், வாலிபப்பருவமும், முதுமையும் வருகின்றனவோ, அப்படியே வேறு உடலும் வந்து சேர்கிறது. அவ்விஷயத்தில் தீர புருஷன் கலங்குவதில்லை.

– ஸ்ரீமத் பகவத் கீதை 2–13

வ்யோம்ந: பரஸ்தாத் ஸவித$_4$ம் ஸமேத்ய
லக்ஷ்ம்யா நியோக$_3$ாத் குருகாதி$_4$ராஜ: ।
ஸ மந்த்ரரத்நம் த்$_3$வயமாஹ யஸ்மை
நாத$_3$ாய தஸ்மை முநயே நமோடஸ்து ॥



பரமபதத்தினின்றும், பெரியபிராட்டியாரின் ஆணையாலே திருக்குருகூர் நம்பியான அந்த நம்மாழ்வார் (யோகதசையில்) எவரை அடைந்து மந்த்ரரத்னமான துவயத்தை உபதேசித்தாரோ, அந்த நாதமுனியின் பொருட்டு நமஸ்காரம்.

- ஆசார்ய வைபவ மஞ்சரி

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீபாலாஜி அறுவை சிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் [பர்ட்]

# BIRRD









- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர்
நிர்வாக மையம்,
ஆதிசேஷு ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர்
முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877–2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877–2264025,
2264619.

| | | |
|---|---|---|
| இணையதளம் | : | www.tirumala.org |
| மின்னஞ்சல் | : | officebirrd@gmail.com |
| மொபைல் செயலி | : | BIRRD HOSPITAL |



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்




ஜூன் 2024

மலர் 03 இதழ் 11


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: குறிப்பெனக்கு திருவேங்கடவனின் திருவடிகளே! -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 7 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: ஜூரஹரேஸ்வரர் - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 10 |
| சிரஞ்சீவி -திரு. இரா.அருண்குமார், புதுச்சேரி. | 11 |
| மன அழுத்தம் தீர பகவத்கீதை -திருமதி விஜயலட்சுமி நடராஜன், சென்னை. | 12 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: குந்தி தேவி(யார்) - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 16 |
| பிணிக்கு மருந்து -பண்டிதர் கு.அரங்கநாதாச்சாரியார், வரிச்சிக்குடி. | 18 |
| ஆனித்திருமஞ்சனம் -திரு.ரா.ஹரிசங்கர், கும்பகோணம். | 21 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு. எம்.எஸ். சுகுமார், சென்னை. | 24 |
| சூர்ணோற்சவத்தின் பெருமை - பேராசிரியர் எம்.எஸ்.ரங்காசார்யர், சென்னை. | 31 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 32 |
| 108 திவ்யதேச வைபவம் : திருக்கார்வானம் (பெரிய காஞ்சிபுரம்) - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 36 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்... - திரு.கிருஷ்ண துளசி, சென்னை. | 43 |
| ஆயுர்வேதம் : முருங்கை இலை -திருமதி வி.உஷா, திருப்பதி. | 45 |
| ராசிபலன்கள் : ஜூன் 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 47 |
| நீதிக்கதை : இணைந்து வாழ்வோம் -ரா.அமிர்த்தவர்ஷினி, புதுச்சேரி. | 48 |
| சித்திரக்கதை : ஹரிநாமம் சோறு போடுமா(ம்) | 52 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : வைரம், முத்து, பொன் அங்கியில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : தெப்போத்ஸவத்தில் ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர் .



# மானிட சேவையே மாதவன் சேவை !

**“யோ**கோ யோக விதாம் வர:” என்பது விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் உள்ள ஒரு பிரபலமான சொற்றொடராகும். இது மகாவிஷ்ணுவின் தனித்துவமான குணங்களில் ஒன்றை விவரிக்கும் சுலோகமாகும். “யோகோ” என்றால் மனதினை அமைதியாக்குதல் என்றும், யோகம் என்றால் தியானம் என்றும், “விதாம் வர:” என்றால் யோக விதிகளுக்கு உத்தமமானவன் என்றும் பொருள் கூறுவர். இந்த வார்த்தைகள் விஷ்ணுவின் பக்தர்களுக்கு ஸ்திரத் தன்மையை அளிக்கின்றன. “யோக க்ஷேமம் வஹாம்யஹம்” எனும் சொற்றொடர் கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசித்ததாகும். அதாவது மனக்கலக்கமுற்று இருந்த அர்ஜுனனின் மனதை ஒருநிலைப்படுத்த ஸ்ரீகிருஷ்ணரால் உபதேசிக்கப்பட்டதாகும். யோகா என்ற சொல் லின் பொருள் ஒன்றிணைத்தல் என்பதாகும். நம் உடலையும் உள்ளத்தையும் இணைத்து சமநிலையில் வைக் கும் யோகாவைப் படித்து, அதனை கடைபிடித்து வந்தால் ஒரு சாதாரண மனிதனையும் மாமனிதனாக மாற்றும் வல்லமை அதற்கு உண்டு. அதாவது நம் வாழ்வின் மாற்றத்திற்கான ஒரு சிறந்த வழிகாட்டியும் அதுவே ஆகும்.

தேகப்பயிற்சி (யோகா) செய்வதால் உடல் உறுதியாவதோடு ஆரோக்கியமும் பெறலாம் என்று சங்க இலக்கியங்களில் ஒன்றான ஏலாதியும் அன்றைய காலங்களில் உடற்பயிற்சி செய்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

*எடுத்தல் முடக்கல் நிமிர்த்தல் நிலையே, படுத்தலோடு ஆடல் பகரின் அடுத்து உயிர்*
*ஆறுதொழில் என்று அறைந்தார் உயர்ந்தவர், வேறு தொழிலாய் விரித்து* – கணிமேதாவியார்.

யோகாவில் உடற்பயிற்சி, பிராணாயாமம், தியானம் மற்றும் ஆன்மீக நடைமுறைகளும் உள்ளன. யோகாவின் மூலம் மனதினை அமைதியாக்க முடியும். யோகாவின் வாயிலாக உறுதியான இதயம், ஆரோக்கியம் மற்றும் ஆன்மீக நிலையை அடைய முடியும்.

“யோக: கர்மசு கௌசலம்” – கர்மசு கௌசலம் என்பது கர்மானுஷ்டானத்தை திறம்படச் செய்யும் திறன் ஆகும். இதன் மூலம் ஒருவர் தனது கடமையைச் சுதந்திரமாகவும், ஆர்வத்தோடும் செய்ய இயலும். ஆதலால்தான் உலக நாடுகள் அனைத்திலும் இந்தியா முன்னிலையில் உள்ளது என்றே கூறலாம். இதனை முன்னிட்டே உலக நாடுகளும் யோகா குறித்து அறிந்து கொள்ள ஜூன் 21ஆம் தேதி “சர்வதேச யோகா தினமாக” கடைபிடித்து வருகின்றன.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களுக்கான ஸ்வாமி தரிசன சேவை, தங்கு வசதி மட்டுமே இன்றி, சமூக நலனிலும் அக்கறைக் காட்டி வருகிறது. யோகா, ஆயுர்வேதம், அலோபதி மருத்துவம் வாயிலாக நோயை குணப்படுத்துதல் மற்றும் நோய் தடுப்பாற்றல்களுக்கான சிகிச்சைகள் அளித்தல் மற்றும் அன்பின் அடையாளமான குழந்தைகளுக்கும் முக்கியத்துவம் அளித்து மருத்துவ சிகிச்சையை செய்து வருகின்றது . அதாவது திருப்பதியில் யோகா தியான மையம் வாயிலாக உடல் மனக்கோளாறுகள் நீங்குவதற்கான பயிற்சிகளை அளிக்கின்றது. ஆயுர்வேதத்தால் ஆயுர்வேத மருத்துவமனையின் மூலம் தீராத நோய்களைக் குணப்படுத்தி வருகின்றது. ஸ்விம்ஸ் மருத்துவமனையில் அலோபதி மருத்துவம் வாயிலாக நவீன சிகிச்சை அளித்தல், பர்ட் மருத்துவமனை மூலமாக எலும்பு, மூட்டுகள் சிகிச்சையின் மூலம் சரி செய்தல், ஸ்ரீபத்மாவதி குழந்தைகள் இதய நல மருத்துவமனை மூலமாக குழந்தைகளின் இதய நோய்களுக்கும் அறுவை சிகிச்சை செய்து வருகின்றது.

மேலும், திருவேங்கடமுடையானைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்காக திருமலை யில் அஸ்வினி மருத்துவமனையை நிர்வகித்து வருவதன் மூலம் தி.தி.தே. பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆரோக்கியத்திற்கான திட்டங்களிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றது என்பதை நாம் அறிய முடிகிறது. தி.தி.தே. மானிட சேவையே மாதவன் சேவையாகக் கருதி சேவை செய்து வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

# குறிப்பெனக்கு திருவேங்கடவனின் திருவடிகளே!

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

ஆழ்வார்களில் நான்காவது ஆழ்வாரான திருமழிசை ஆழ்வார் திருமாலின் கையாழி என்று பெருமை பெற்ற சக்கரத்தாழ்வாரின் அம்சமாக அவதரித்தவர். உரையிலிடாதவர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. இவர் நான்முகன் திருவந்தாதியில் மிக அதிகமான பாசுரங்களால் திருவேங்கடத் திருத்தலத்தை மங்களாசாசனம் செய்கிறார்.

அதில் முதல் பாசுரம் தான் இந்தப் பாசுரம். முதலில் பாசுரத்தைப் பார்ப்போம்.

*குறிப்பெனக்குக் கோட்டியூர்மேயானை யேத்த*
*குறிப்பெனக்கு நன்மை பயக்க - வெறுப்பனோ?*
*வேங்கடத்து மேயானை மெய்வினை நோ யெய்தாமல்*
*தான்கடத்தும் தன்மையான் தாள்.*

கோட்டியூர் மேயானை – திருக்கோட்டியூரில் நித்யவாஸம் பண்ணுமவனும், வேங்கடத்து மேயானை – திருமலையில் நித்ய வாஸம் பண்ணுமவனுமான பெருமானை, ஏத்த – துதிப்பதற்கு, எனக்கு குறிப்பு – எனக்கு ஆசை, நன்மை பயக்க – (எம்பெருமானை இடைவிடாது அநுபவிப்பதனாலுண்டாகும்) பெருமையை உண்டாக்கிக் கொள்வதற்கு, எனக்கு குறிப்பு – எனக்கு குதூஹலம், மெய்வினை – சரீர ஸம்பந்தத்துக்கு அடியான கருமங்களும், நோய் – வியாதிகளும், எய்தாமல் – வந்து சேராதபடி, தான் கடத்தும் தன்மையான – தானே அவற்றைப் போக்கியருளும் ஸ்வ பாவத்தை உடையனான அப்பெருமானுடைய, தாள் – திருவடிகளை, வெறுப் பனோ – மறந்திருப்பனோ. திருக்கோட்டியூர், திருவேங்கடம் முதலான பல திருப்பதிகளிலே எனக்காக வந்து நிற்கின்ற எளியனான எம்பெருமான் திருவடிகளை மறந்திருக்க என்னால் முடியுமோ? (முடியாது).

“திருக்கோட்டியூரிலும், திருமலையிலும் சென்று எம்பெருமா னுக்குப் பல்லாண்டு பாட வேண்டும் என்றும், அவனை இடைவிடாது அநுபவித்து ஆத்மாவுக்கு நன்மையை விளைத்துக் கொள்ள வேணுமென்றும் ஆசை கொண்டு இருக்கிறேன்’’ என்கிறார். “எவ்வித மான கருமங்களும் துக்கங்களும் எனக்கு வந்து கிட்டாதபடி செய்து என்னைக் காத்தருள்கின்ற அந்தப் பெருமானுடைய திருவடிகளை நான் எப்படிப் பற்றிக் கொள்ளாமல் இருக்க முடியும்?” என்கிறார்.

இந்தப் பாசுரத்தில் “குறிப்பு” என்ற வார்த்தையை, திரும்பத் திரும்ப ஆழ்வார் பயன்படுத்துகின்றார்.

குறிப்பு என்பதற்கு நோக்கம், ஆசை என்று பல பொருள்கள் உண்டு. இனியென் திருக்குறிப்பே (திவ். பெரியாழ். 5,4,1) என்று பாசுரங்களில் வரும். *‘‘பொறியானன்றி மனத்தாற் குறித்துணரப்படுவது’’* என்று தொல் காப்பியம் கூறும் (தொல்.சொல்.297, சேனா).



ஆழ்வாரின் நோக்கம் இந்தப் பாடலிலே பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

என்னுடைய நோக்கம் திருக்கோட்டியூர் பெருமானை தரிசிக்க வேண்டும். திருவேங்கடத்துப் பெருமானை தரிசிக்க வேண்டும் என இரண்டு பெருமாளையும் இந்தப் பாசுரத்திலே இணைக் கின்றார். திருக்கோட்டியூர் திருத்தலத்தையும், திருவேங்கடத் திருத்தலத்தையும் எப்படி இணைக்கிறார் என்று பார்க்க வேண்டும்.

முதலில் திருக்கோட்டியூர் தலத்தைப் பார்ப்போம். அதற்கு கோஷ்டிபுரம் என்று பெயர். அதாவது இரணியன் கொடுமையைத் தாள முடியாமல் அவனை அழிப்பதற்கு வேண்டிய ஆலோசனை செய்ய எல்லா தேவர்களும், அவன் வர முடியாத ஒரு இடமான கதம்ப முனிவரின் ஆசிரமத்திற்கு கோஷ்டியாகச் சேர்ந்து வந்ததால் கோஷ்டிபுரம் (திருக்கோஷ்டியூர்) எனப் பெயர்.

இந்தப் பாசுரத்தில் நன்மை பயக்க என்ற ஒரு தொடர் உண்டு. அதாவது தேவர்கள் தங்களுக்கு நன்மையை வேண்டி விரும்பி வந்த தலம் திருக்கோஷ்டியூர்.

இனி திருவேங்கடத்துக்கு வருவோம். திருவேங்கடம் விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் அருள நீர்மையினால் பெருமான் பாற்கடலில் இருந்து இறங்கி (இரங்கி) நின்ற மலை. அதனால் பெருமானை தரிசிக்க வானவர்கள் தினமும் திருவேங்கட மலைக்கு வந்து சேவிக்கிறார்கள். தங்களுக்கு கஷ்டம் ஏற்படும் போதெல்லாம் திருவேங்கட வரைக்கு வந்து முறையிடுகிறார்கள். அவர்கள் கஷ்டம் தீருகிறது.



இதை திருமழிசை ஆழ்வாரே, **''வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும்''** என்றும், **''வானவரைக் காப்பான் மலை''** என்றும், **''தண்ணருவி வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு''** என்றும் பாடுவதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும்.

திருக்கோட்டியூர் என்ற சொல்லுக்கு பாபங்களை (வினைகளை) அழிக்கும் ஊர் என்று பொருள் உண்டு. திருவேங்கடம் என்றாலும் அதே பொருள் தான் வரும். வினைகளையும், பாவங்களையும் வேக வைக்கும் (அழிக்கும்) இடம் வேங்கடம் (வேம் + கடம் =வேங்கடம்).

எனவே இரண்டு தலமும் அடிப்படையில் ஒரே நோக்கத்தைக் கொண்டவை. எனவே ஆழ்வார் தன்னுடைய குறிப்பாக இந்த இரண்டு தலங்களை யும் இந்தப் பாசுரத்தில் இணைக்கிறார்.

திருவேங்கடத்தில் அவன் மலை மேல் நிற் கின்றான். திருக்கோட்டியூரும் நான்கு அடுக்குக ளால் ஆன சிறு குன்று போன்ற தலம்தான்.

திருக்கோட்டியூர் திருத்தலத்தில் இருக்கக் கூடிய புஷ்கரணிக்கு தேவ புஷ்கரணி என்று பெயர். திருவேங்கடத்தில் உள்ள புஷ்கரணிக்கு சுவாமி புஷ்கரணி என்று பெயர். இரண்டு புஷ்கரணிகளும், நீராடியவர்களின் பாவங்களை நீக்கக்கூடிய சக்தி படைத்தவை.

திருக்கோட்டியூரில் உரக மெல்லணையான் என்ற பெயரோடு பாம்பணையில் க்ஷீராப்தி நாத னாகச் சாய்ந்து அருள் புரியும் பெருமான், திருவேங்கடத்தில் நின்று அருள் புரிகின்றான்.

இங்கே இன்னொரு முக்கியமான குறிப்பை யும் நாம் கவனிக்க வேண்டும். பொதுவாகவே விண்ணோர்கள் தொழும் தலம் என்று ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யும் நுட்பத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கர்ம பூமியில் பிறந்தவர்களுக்குத்தான் வினையும், விளைவுகளும் உண்டு. அதைத்

தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகளும் திருத்தலங்களும் பூமியில் தான் உண்டு. இறைவன் படைத்த இந்தப் பேரண்டத்தில் எத்தனையோ உலகங்கள் இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அதிலே விண்ணோர்கள் என்று சொல்லப்படுகின்ற தேவர்கள் வாழ்கின்ற உலகமும் உண்டு. அந்தத் தேவர்களுக்கு ஏதேனும் குறையோ, துன்பமோ ஏற்பட்டால் அவர்கள் அங்கேயே அதைத் தீர்த்துக் கொள்ள முடியாது. மண்ணுலகில் வந்து, இங்கு எழுந்தருளி இருக்கக் கூடிய எம்பெருமான்களை வழிபட்டுத்தான் தீர்த்துக் கொள்ள முடியும். இந்திர லோகத்திலோ, சந்திர லோகத்திலோ, பிரம்மலோகத்திலோ, இந்தத் திருகோட்டியூரோ, திருவேங்கடமோ இல்லை; இம் மண்ணில்தான் இருக்கிறது. அதனால்தான் ஆழ்வார் வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே என்றார்.

வினையைத் தீர்க்கக் கூடிய வழிமுறைகள் இந்த மண்ணில்தான் உண்டு. அதனால்தான் ஆழ்வார் நுட்பமாக இந்தப் பாசுரத்தில் திருக்கோஷ்டியூர் மேயானையும், திருவேங்கடத்து மேயானையும் குறிப்பாகக் கொண்டிருக்கிறேன் என்பதை கடைசி வரியில் விவரிக்கிறார்.

கர்ம வினையால் வரக்கூடிய துன்பங்களையும், நோய்களையும் நீக்கக்கூடிய ஆற்றலும், அதன் எதிர் தட்டாக நன்மை தரக்கூடிய ஆற்றலும் எம்பெருமானின் திருவடிகளுக்குத்தான் உண்டு. அதனால் அந்தத் திருவடிகளை நான் குறிப்பாகக் கொண்டேன் என்று மிக அற்புதமாக எடுத்துரைக்கின்றார்.

நம் வினைகளைச் சுட்டெரித்து நமக்கு சகல நன்மைகளையும் செய்யக்கூடிய அந்தத் திருவேங்கடவன் திருவடிகளே நமக்குத் தஞ்சமாக இருக்கட்டும். திருமழிசை ஆழ்வார் காட்டிய இந்தப் பாசுர வழியே நாம் உய்வு பெறும் வழி.

பாசுரம் அறிவோம்...

## திருமலையப்ப ஸ்வாமிக்கு ஜ்யேஷ்ட அபிஷேகம்



சுமார் 600 ஆண்டுகளாக திருமலையப்ப ஸ்வாமியின் திருமேனியினை நன்கு பாதுகாக்கும் பொருட்டு அவருக்கும், தேவியருக்கும் எப்பொழுதும் தங்கக் கவசம் அணிவிக்கப்பட்டிருப்பதால் பக்தர்கள் அவரை தங்கக் கவசத்திலேயே தரிசிக்கின்றனர். இருப்பினும் இந்தத் தங்க கவசங்களில் ஏதாவது சிறிய அளவில் பின்னம் ஏற்பட்டு இருந்தாலும் அதைச் சரி செய்து மீண்டும் அணிவிக்க வகை செய்யும் வகையில் ஆண்டு தோறும் ஜ்யேஷ்ட எனப்படும் ஆனி மாதம் ஜ்யேஷ்டாபிஷேகம் என்ற வைகானச ஆகம பரிஹார, சாந்தி ஹோமங்கள், திருமஞ்சனம், புறப்பாடு போன்றவை மூன்று நாட்களுக்கு நடைபெறுகின்றன. ஜ்யேஷ்ட (ஆனி) மாதம், ஜ்யேஷ்டா (கேட்டை) நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய நாளன்று முடிவடையும் இந்த ஜ்யேஷ்டாபிஷேக உற்சவம் திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது.



இதற்கு "அபித்யேயக அபிஷேகம்" என்ற பெயரும் உண்டு. திருமலையப்ப ஸ்வாமியையும் ஸ்ரீதேவி, பூதேவித் தாயார்களையும் பாதுகாப்பாக மூடியிருக்கும் அபித்யேயக கவசங்கள் என்ற பெயர் கொண்ட இந்தக் கவசங்களை யாராலும் அழிக்க முடியாது என்பதால் இப்பெயர் ஏற்பட்டு உள்ளது. கலியுகத்தின் தீமைகளிலிருந்து தன் பக்தர்களைக் காக்கும் பொருட்டு திருவேங்கடவன் யாராலும் அழிக்க முடியாத கவசங்களோடு பூலோகத்திற்கு வந்ததாகத் தல புராணம் தெரிவிக்கிறது. எனவே இந்தக் கவசங்களை நன்கு பாதுகாக்கும் பொருட்டும், உற்சவ பேரரின் தெய்வ சான்னித்தியம் அதிகரிக்கும் பொருட்டும் ஜ்யேஷ்டாபிஷேத்தின்போது சிறப்பான சடங்குகள் செய்யப்படுகின்றன.







# சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# ஜ்வரஹரேஸ்வரர் சிற்பச் சிறப்பு



- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

மானுட உடல் இயக்கத்துக்கு தேவையில்லாத சில வேதிப் பொருட்கள் வைரஸ் என்னும் நச்சுயிரி, பாக்டீரியா என்னும் நுண்ணுயிரி போன்றவை உடல் செல்களில் நுழைந்து தங்களது நச்சுத் தன்மையை வெளியிட்டுத் தூண்டுவதால் உடல் வெப்பநிலை அதிகரிக்கத் தொடங்குகிறது. அதனை சுரம் என்று அழைப்பார்கள்.

இப்பிணியை அகற்றி அருளும் ஜ்வரஹரேஸ்வர மூர்த்தி (ஜ்வரவரதேவர்) தோற்றத்தில் நடராஜ மூர்த்தம் போல் இருந்தாலும் இவருக்கு மூன்று கைகள், மூன்று பாதங்கள் மேலும் (சில தலங்களில் மூன்று முகத்துடனும்) என எல்லாம் மூன்றாக இருக்கும் என்பதும், சில இடங்களில் சிவலிங்கத் திருமேனியு டன் எழுந்தருளியுள்ளார் என்பதும், தேவாரம் அருளிய திருஞான சம்பந்தப் பெருமான் ஜ்வரஹரேஸ்வரை வழிபட்டு திருப்பதிகம் இயற்றி உள்ளார் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

**ஜ்வரஹரேஸ்வரர் எழுந்தருளியுள்ளத் திருத்தலங்கள் சில...**

காஞ்சிபுரம் லிங்கத் திருமேனி, தஞ்சாவூர் திருவையாறு லிங்கத் திருமேனி, 1) கும்பகோணம் ஸ்ரீஆதிகும்பேசுவரர், 2) ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர், 3) ஸ்ரீபாணபுரீஸ்வரர், 4) நாகேஸ்வரர் (ஜ்வரஹர விநாயகராக) ஆகிய நான்கு திருக்கோயில்களிலும் திருவிடைமருதூர், அச்சுதமங்கலம், திருவாரூர், திருக்கொண்டீசுரம், அப்பர் மாகாணம் திருஉசாத்தானம், லால்குடி திருநணா, திருவண்ணாமலை, சென்னை கோயம்பேடு, சின்னமனூர், நெல்லை களக்காடு ஆகிய கோயில்களில் அருளும் ஸ்ரீஜ்வரதேவருக்கு சன்னதிகள் உள்ளன. மேலும் தமிழக அளவில் இன்னும் பல சிவாலயங்களிலும் அருளும் ஜ்வரஹரேஸ்வரர் சன்னதி உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீஜ்வரஹரேஸ்வர மூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட்டு வர வைரஸ் தொற்றில் இருந்து விடுபடலாம் என்பது ஐதீகம்.

கொடி மாடச் செங்குன்றம் என்று இலக்கியங்களில் அழைக்கப்பட்டு வந்த திருத்தலம் இப்போது திருச்செங்கோடு என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது. இங்குள்ள மலை மேல் அமைந்திருக்கிறது அர்த்தநாரீஸ்வரர் கோயில். ஒரு முறை சம்பந்தர், அங்கு நிலைவி வந்த குளிர் காய்ச்சல் குறைய **"அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்..."** எனத் தொடங்கி பதினொரு தேவாரத் திருப்பதிகங்கள் பாடினார். அதன் காரணமாக அனைவருக்கும் காய்ச்சல் குறைந்தது என்பது புராண வரலாறு. அது போலவே, மதுரையில் கூன் பாண்டியனை வெப்பு நோய் தீர, *"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு"* என்ற திருநீற்றுப் பதிகம் பாடி, உடல் உஷ்ணம் தீர்த்து இயல்பு நிலைக்கு கொண்டு வந்தார்.

இவ்வாறாக ஜ்வரஹரேஸ்வரர் காய்ச்சலைக் குணப்படுத்துபவராகப் போற்றப்படுகிறார்.

# சிரஞ்சீவி

அனுமனுக்கு "சிரஞ்சீவி" வரம் அளித்தார் இராமன். அதே போல இராவண வதத்திற்குப் பிறகு இலங்கைக்கு அரசனான விபீடணனுக்கு முடிசூட்டி வைத்த இராமன் அவனுக்கும் "சிரஞ்சீவி" வரம் அளித்தார். இப்படி அளித்த பிறகுதான் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. "தான் மட்டும் தான் சிரஞ்சீவி" என்று நினைத்து கொண்டிருக்கும் அனுமன் தனக்குப் போட்டியாக விபீடணனும் சிரஞ்சீவியாகி விட்டானே என்று வருத்தப்படுவானோ என்று யோசித்து அதை அனுமனிடம் கேட்கவும் செய்தார். "எங்கே நான் ஒருவன் மட்டுமே சிரஞ்சீவியாக இருந்து விடுவேனோ என்று பயந்திருந்தேன். நல்லவேளையாக விபீடணனையும் சீரஞ்சீவியாக்கி விட்டீர்கள். எனக்கு சந்தோஷம் தான் ராமா" என்று பணிவுடன் பதில் சொன்னான் அனுமன்.

"அதெப்படி உனக்குச் சந்தோஷம்?" என இராமன் கேட்டார்.

"நான் சிரஞ்சீவி என்றால் இந்த உலகம் முற்றிலும் அழிந்த பிறகும் நான் நிலைத்திருப்பேன் என்பதுதானே? நான் தனியொருவனாக இருந்தால் என் காதுகளுக்கு வேலையே இல்லாமல் போய் விடுமோ? யாரேனும் ராமஜெயம் சொல்ல, அதை நான் காது குளிரக் கேட்க வேண்டும் என்ற என் அவா, நான் தனித்து நிற்கும் போது ஈடேறாது அல்லவா? ஆகவே விபீடணனும் சிரஞ்சீவியாகி விட்டால் அவர் "ராமநாமம்" உச்சரித்துக் கொண்டே இருப்பார். நான் கேட்டுக் கொண்டே இருப்பேன். இந்தப் பேறு நான் தனியாளாக இருந்தால் கிடைக்குமா? என்று பணிவுடன் கூறினான் அனுமன்!

## உயிர் காத்த அனுமன்

இராமாயணத்தில் மூன்று முறை மூவர் உயிரைக் காத்திருக்கிறான் அனுமன். இராமன் தன்னை மீட்க வரமாட்டானோ என்ற ஐயத்தில் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற சீதைக்கு முன்னால் தோன்றி "ராமஜெயம்" என்று சொல்லி அவளுடைய உயிரைக் காத்தான். அதேபோல போர்க்களத்தில் மயங்கி விழுந்த இராம-இலட்சுமணன் மற்றும் போர் வீரர்களை சஞ்சீவி மலையைப் பெயர்த்து வந்து அவர்களுடைய உயிரைக் காத்தான். மூன்றாவதாக, இராமன் திரும்ப வரமாட்டான் என்ற அவநம்பிக்கை கொண்ட பரதன், அக்னி வளர்த்து அதில் வீழ்ந்து தன்னை அழித்துக் கொள்ளத் துணிந்த சமயத்தில் "வருகிறார் ராமர்" என்று ஓடோடி வந்து அபயக்குரல் கொடுத்து அவனையும் காத்தவன் அனுமன்.

- திரு.இரா. அருண்குமார், புதுச்சேரி, 9944802769





# மனஅழுத்தம் தீர பகவத்கீதை

- திருமதி விஜயலட்சுமி நடராஜன்,
சென்னை, 8248003302

பழங்காலத்தில் நம் நாட்டில் மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் குறித்து வரலாற்றுக் குறிப்பு எதுவும் நாம் அதிகம் காணக்கூடியதாக இல்லை. மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் கூட போரில் தோற்று, பகைவன் கையில் சிக்கிய எந்த மன்னனும், அவனுடைய வீரர்களும் இத்தகைய மன அழுத்தத்திற்கு ஆளானார்கள் என்று சொல்லிக் கொள்ளும் வகையில் சான்றுகள் இல்லை. ஆனால் நம் முன்னோர்கள் மன அழுத்தம், தற்கொலை இல்லாமல் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்ததாகப் புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

ஏனெனில் மன அழுத்தம் என்றால் என்ன என்பது பற்றி அவர்கள் அறியாததற்கு மிக முக்கியமான காரணம் எதிர்காலம் பற்றிய மிகையான கவலைப்படுதல் என்பது அவர்களிடத்தில் அறவே இல்லை. தங்களது இன்றைய கடமையை மட்டுமே அவர்கள் நிறைவேற்றினர்.

எதற்கும் அஞ்சாமல், இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதி, எதிரியை எதிர்கொண்டு நின்று வாழ்ந்த புகழ் பெற்ற வீரர்களே நம் நாட்டின் மன்னர்கள். கடமைக்கு அஞ்சி மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொள்வதை மிகுந்த அவமானமாகக் கருதி கடமையை ஆற்றினர்.

### நம் முன்னோர்கள் மன அழுத்தமின்றி வாழக் காரணம்

அர்ஜுனன் மூலமே நம் முன்னோர்கள் மன அழுத்தமின்றி வாழும் பக்குவத்தைப் பெற்றனர் என்பதே உண்மை. அர்ஜுனன், மன அழுத்தத்திற்கு உள்ளாகி வாழ்வை வெறுத்து செயலற்று நிற்கையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குருவாக அவனுக்கு உபதேசம் செய்து, அவனது மன அழுத்தத்தைப் போக்கி, உற்சாகத்துடன் போரிட உத்வேகம் அளித்தார். இந்த அறிவுரை நம் நாட்டில் உள்ள ஆன்மீக அறிஞர்கள் மூலமாக குடும்பங்களில் ஆழ வேரூன்றியதன் காரணமாகவே, இன்று வளர்ந்த நாடுகளே வியந்து பார்க்கும் வகையில், பல வரலாற்று சிறப்பு மிக்க கோயில்கள், தேர்கள், கோட்டைகள், நகரங்கள், குளங்கள், அணைகள் மற்றும் பாலங்கள் போன்றவைகளை நம் முன்னோர்கள் உருவாக்கினர்.

தொழில் நுட்ப சாதனங்கள் இல்லாமல், எப்படி? எவ்வாறு இதைச் சாதித்தார்கள்? என்று ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு மேலை நாடுகளை அசர வைக்கும் காரியங்களைச் செய்து கொண்டு ஆரோக்கியமாகவும், இன்பமாகவும், பயனுள்ளதாகவும் வாழ்ந்தனர். பின்வரும் சந்ததிகளுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தனர். தன்னலம் என்பதை விட பொதுநலமே அவர்கள் மனதில் முதன்மையாக இருந்தது.

ஆனால் இன்றைய காலத்தில் நாம் செய்வது என்ன? பொதுநலனை விட சுயநலத்தை நாம் பெரிதாக எண்ணி, அதையே குறிக்கோளாக கொண்டு வாழ்கிறோம். நம்மை விட உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களைப் பார்த்து விட்டு நாமும் அப்படி ஆக வேண்டும் என்ற தேவையற்ற ஆடம்பர வாழ்க்கை வாழ பேராசை கொண்டு கவலைப்படுகின்றோம்.

இதனால் சிலர் தர்ம விதிகளை மீறி தீய வழிகளிலும் செல்ல முற்பட்டு கடைசியில் ஏதாவது ஒரு கயவர் கூட்டத்திடம் சிக்கி மானத்திற்கு பயந்து தங்களை தாங்களே மாய்த்துக் கொள்கின்றனர். இன்று தற்கொலைகள் நாட்டில் அதிகரித்து வருவதற்கு காரணம் இது போன்ற தேவையற்ற பேராசைகள், எதிர்பார்ப்புகள் மட்டுமேதான். இதற்கு இன்றைய குழந்தைகள் கூட விதிவிலக்கல்ல. பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் குழந்தைகள் மீது தேவையற்ற எதிர்பார்ப்புகளைத் திணித்து அவர்களை மன அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றனர்.

அதிகப்படியான படிப்பு மற்றும் மற்ற பலதரப்பட்ட திறமைக்கான போட்டிகளே இதற்குக் காரணமாகும். அதில் உச்சபட்ச வெற்றியைத் தன் குழந்தையே அடைய வேண்டும் என்ற இலக்கு. இது போன்ற தேவையற்ற கட்டாயங்களின் காரணமாக மாணவர்கள் மன அழுத்தத்திற்கு தள்ளப் படுகின்றனர். இது போன்ற தேவையற்ற விஷயங்களைக் குறித்த மிக மிகத் தீவிரமான யோசனை, மன அழுத்தமாக மாறி மனிதர்களை பயமுறுத்தி தற்கொலை செய்து கொள்ள தூண்டுகிறது. இந்தத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டும் மன அழுத்தம் தேவையற்றது.

அர்ஜுனன் இது போன்ற ஒரு அவஸ்தையில் தான் நான் இருக்கிறேன் என்று கிருஷ்ணரிடம் தெரிவிக்கிறான்.

*''த்ருஷ்ட்வேமம் ஸ்வஜனம் க்ருஷ்ண*
*யுயுத்ஸும் ஸமுபஸ்திதம்*
*ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிசுஷ்யதி*
*வேபதுச்ச சரீரே மே ரோமஹர்ஷச்ச ஜாயதே''*

*''காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ*
*பரிதஹ்யதே*
*ந ச சக்னோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன:''*

*''நிமித்தானி ச பச்யாமி விபரீ தானி கேசவ*
*ந ச ச்ரேயோஅநுபச்யாமி ஹத்வாஸ்வஜந மாஹவே''*


– பகவத் கீதை *1–29,30,31*

ஒரு மனிதனுக்கு ஏற்படும் அதிகப்படியான மன அழுத்தம் பற்றிக் கூறுகிறான் அர்ஜுனன்.

உடல் நடுங்கி, வாய் உலர்ந்து தீ போல பற்றி எரிகிறது. உடலின் ரோமங்களில் மயிர்க்கூச்சம் ஏற்பட்டு கையில் இருக்கும் காண்டீப வில் கீழே நழுவி விழுகிறது. குழப்பம் அதிகமாகி மயக்கம் வருவது போல் நிற்கக் கூட முடியவில்லை. கிருஷ்ணா! என்னையே நான் மறந்து நினை விழக்கி றேன்'' என்று அர்ஜுனன் கூறுவது மன அழுத்தத்தின் ஒரு உச்சகட்ட அறிகுறி.

பெண்களின் மேன்மை காக்கப்பட வேண்டும் என்ற தர்மம் ஒன்று மட்டுமே மகாபாரதப் போரின் அஸ்திவாரம். இன்னும் யுத்தம் தொடங்கப்பட வில்லை. ஆனால் அதற்கு முன்பே அதன் விளைவு என்று தன் சொந்தக் கற்பனையில் மிகை யாக உருவகப்படுத்திக் கொண்டு அவஸ் தைப்பட்டு மன அழுத்தத்திற்கு ஆளாகி புலம்ப வேண்டிய அவசியம் தான் என்ன?

நம் மனோ கற்பனைகளையே ஆதார மாகக் கொண்டு மன அழுத்தத்திற்கு ஆளாகி மாய்ந்து போகிறோம். மன அழுத்தத்திற்கு ஆளான ஒரு நபர், தன் சிக்கலைத் தீர்க்க தனது உயிரை மாய்த்துக் கொள்வது ஒன்றே தன் பிரச்சனைக்கு நிரந்தரமான ஒரு நல்ல தீர்வு என்று கருதுகின்றார். முடிவெடுத்த உடனேயே செயல்படுத்து கிறார். விளைவு தற்கொலை. அர்ஜுனன் மட்டும் அல்ல நாம் அனைவரும் செய்யும்



## கண்ணன் கருத்துரை



*யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ।*
*தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்சஸம்பவம் ॥*

(10-41)

**உலகத்தில் சில பொருள்களில் காணப்படும் தேஜஸ், அழகு, ஆற்றல் ஆகியன எல்லாம் என் பொலிவின் ஒரு பதியால் உண்டானது என நீ அறிவாயாக!**



தொகுப்பு:
பேராசிரியர்
அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.

தவறும் இதுதான். தேவையற்ற விஷயங்களைக் குறித்து அதிகமாக கவலைப்படுவதோடு, நம்மோடு பகவான் அந்தர்யாமியாக இதயத்தில் இருப்பதை மறந்து விடுகிறோம்.

நாம் இந்த உடலல்ல. ஆத்மா என்ற தன்னுணர்வையும் மறந்து போகின்றோம். உண்மையில் பகவான் நம் அனைவரின் இதயத்திலும் நமக்குத் துணையாக எப்போதும் இருக்கின்றார். நாம் தான் அவரை மறந்து போகிறோம். நம் மனசாட்சியாக அவர் நமக்கு அறிவுரை கூறுவதை நாம் உணர்வதில்லை. கவனிப்பதில்லை. அலட்சியம் செய்கிறோம். அவர் நம் ஒவ்வொருவரின் காதுகளிலும் அர்ஜுனனுக்கு கூறியது போன்று நமக்கும் நம் வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகளுக்கு ஏற்ற படி கீதையை உபதேசித்துக் கொண்டுதான் இருக்கிறார். நாம் தான் செவிடர்களைப் போன்று காதில் வாங்காமல் இருக்கிறோம்.

மன அழுத்தம் என்பது தேவையற்ற விஷயங்களைக் குறித்து அதிகமாக சிந்திப்பதனாலேயே உருவாகிறது. இதற்குப் பதிலாக நாம் இங்கே புரிந்து கொள்ளும் வகையில் பகவான் கூறுகிறார்.

*அசோச்யானன்வ*
*சோசஸ்த்வம் ப்ரஜ்ஞுவா*
*தாம்ச்ச பாஷஸே*
*கதாஸூனகதாஸூம்ஸ்ச்ச*
*நானுசோசந்தி பண்டிதா:*

– பகவத் கீதை 2–11

பகவான் கூறுவது யாதெனில் "தேவையற்ற

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*காஞ்ச்யாமத$_2$ாக$_3$ம்ய ஸயாத$_3$வோபி ராமானுஜம் வீக்ஷ்ய*
*தத$_3$ாக$_3$மம் ச।*
*ச்ருத்வா ஸமாஹூய விலோப$_4$யம்ஸ்தம் ததஸ்ஸ்வசிஷ்யை*
*ஸ்ஸமபாட$_2$யச்ச ॥*

(30)



**காஞ்சிக்கு வந்து சேர்ந்த யாதவரும் இராமானுஜரைக் கண்டு அவர் திரும்பி வந்த விதத்தையும் கேள்விப்பட்டு, அவரை அழைத்து மயக்கி, மறுபடியும் தமது சிஷ்யர்களோடு சேர்த்துப் பாடம் சொல்லி வந்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

விஷயங்களைக் குறித்து அதிகமாகக் கவலைப்பட வேண்டாம். உன் உரிமை கடமையில் மட்டும்தான் பலனில் அல்ல" என்று அர்ஜுனனைக் கடுமையாக கோபித்துக் கொள்கிறார்.

உண்மை தானே? இன்னும் யுத்தம் நடத்தப்பட வில்லை. வெற்றி தோல்வி பற்றித் தெரியாது. பின் ஏன் மன அழுத்தத்திற்கு ஆளாகி புலம்ப வேண்டும்?

அர்ஜுனன் வாழ்வின் இந்தச் சம்பவம் போல, நம் வாழ்வில் கூட நடந்திருக்கலாம். இது பொதுவான உணர்வுதான் அடுத்த சில நிமிடங்களில் என்ன நடக்கும் என்று முற்றிலும் தெரியாத அறியாத ஒன்றைப் பற்றி, இந்த நிமிடம் சிந்தனை செய்து மனிதர்களாகிய நாம் ஏன் வேதனை அடைய வேண்டும்?

நாளை என்ற "நாளை" "காலத்தை" அந்த பரம்பொருளிடம் விட்டு விடுங்கள். நாளை நடப்பதை அந்த நாராயணன் ஒருவனே அறிவான். நமது அதிகாரம் ஒவ்வொரு நாளும் அன்று இரவு வரை செய்ய வேண்டிய கடமை மட்டுமே. அதனால் நிகழ்கால கடமைகளை மட்டுமே நினைவில் நிறுத்தி காரியம் ஆற்றுங்கள். உங்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் இன்றைய செயல்களை எத்தனை அற்புதமாகவும், அழகாகவும், குறை சொல்ல ஏதுமில்லாமல் மிகவும் சிறப்பாக செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மட்டுமே சிந்தியுங்கள். அந்த எண்ணத்திற்கு வடிவம் கொடுத்து அதற்கான செயல்களில் முயற்சியோடு உழையுங்கள் அதற்கான பலன் தானாகவே நமக்கு கிடைக்கும்.

### தேவையற்றதை எண்ணி வருந்தாதே...

தேவையற்ற விஷயங்களைக் குறித்து தீவிரமாக சிந்திக்கவோ, ஈடுபடவோ வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர்ந்து இந்த நாள் இனிய நாளாக வாழ்க்கையை இலகுவாக வாழப் பழகுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் அத்தகு பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இது போன்ற தீவிர அழுத்தம் ஏற்படும்போது அதனைப் போக்கத் தியானம், ஜெபம், நாமக்கீர்த்தனம் மற்றும் யோகப் பயிற்சி செய்யுங்கள். மன அழுத்தம் காணாமல் போகும். யோகாசனப் பயிற்சியின் போது பகவானின் நாமங்களைக் கூறுங்கள்.

ஆசனம் செய்வது உடற்பயிற்சி செய்வதை போல அல்ல. ஆன்மீக உணர்வுடன் கூடிய யோகாசனமே முழுப் பலனை நல்கும். தனிமையில் பகவானின் லீலைகளை நினைவு கூறுங்கள். உறவுகள் அல்லது நண்பர்கள் இடத்தில் உங்களுக்குப் பிடித்த இறைவனின் திருலீலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். மனம் மிகவும் சந்தோஷ மாக இருக்கும். குதூகலமும் பிறக்கும்.பகவத் கீதையை நமக்கு அளித்த ஸ்ரீகிருஷ்ண பகவானை எப்பொழுதும் நன்றியுடன் நினைவு கூறுங்கள்.


**ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, திருப்பதி**

**பசுவைக் காப்போம்! நலம் பெறுவோம்!!**



**தி.தி.தே. பசுக்களைப் பாதுகாப்பதற்காக "ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை"யை நிறுவி, பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. நன்கொடை ரூ.1,000/- குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே. திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. அஞ்சல், திருப்பதி - 517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும். ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளைக்கு வழங்கும் நன் கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம் 1961-ன்படி 80 ஜி. (5)ன்கீழ் வருமான வரி விலக்கும் உண்டு.**

அலசுவோம்...
அறிவோம்...
ஆதிகால நாயகர்களை...

# குந்தி தேவி(யார்)

பாண்டவர்களின் தாயார் குந்திதேவியின் இயற்பெயர் ப்ருதை என்பதாகும். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த யாதவ குலத்தைச் சேர்ந்த சூரன் என்ற அரசனின் முதல் குழந்தையாகிய ப்ருதை மிகவும் அழகு வாய்ந்தவள்.

சூரனுடைய அத்தை மகன் குந்திபோஜன், அவருக்குக் குழந்தைகள் பிறக்காததால், சூரன் தன் மகள் ப்ருதையை ஸ்வீகாரமாகக் கொடுத்தார். குந்திபோஜனின் மகளாக வளர்க்கப்பட்டதால் ப்ருதைக்குக் "குந்தி" என்ற பெயர் ஏற்பட்டது.

அனைவரிடமும் மரியாதையாக நடந்து கொள்ளும் பண்புடைய குந்தி, தங்கள் அரண்மனையில் ஒரு வருட காலம் தங்கியிருந்த துர்வாச முனிவரின் மனம் மகிழும்படியாகப் பணிவுடன் உபசாரங்கள் செய்தாள். குந்தியின் உபசாரங்களால் மிகவும் திருப்தியடைந்த துர்வாசர் மிகவும் சக்தி வாய்ந்த மந்திரம் ஒன்றை அவளுக்கு உபதேசித்து, எதிர்காலத்தில் அந்த மந்திரத்தைச் சொல்லி எந்த ஒரு தேவதையை வேண்டிக் கொண்டாலும் அந்த தேவதையின் அருளால் புத்திரப்பேறு கிடைக்கும் என்று கூறினார்.

சிறு வயதினளாகிய குந்தி விளையாட்டுத் தனமாக அந்த மந்திரத்தைச் சொல்லியபடியே சூரிய பகவானை வேண்டிக் கொண்டாள். குந்தியின் எதிரில் தோன்றிய சூரிய பகவான் தம்முடைய அம்சங்கள் நிறைந்தவனும், கவச குண்டலங்களுடன் கூடியவனுமாகிய ஆண் குழந்தை ஒன்றை குந்திக்கு அருளினார்.

திருமணமாகாத தனக்குக் குழந்தைப்பேறு ஏற்பட்டதை எண்ணிக் கலங்கிய குந்தி, அந்தக் குழந்தையைத் தங்கப் பெட்டி ஒன்றில் வைத்து மூடி ஆற்றில் விட்டு விட்டாள். அந்தக் குழந்தை தேரோட்டி ஒருவனால் கண்டெடுக்கப்பட்டு கர்ணன் என்ற பெயருடன் வளர்க்கப்பட்டான். கர்ணனும் மிகப் பெரிய வீரனாக வளர்ந்து திருதராஷ்டிர புத்திரன் துரியோதனனின் நண்பனாகினான்.


இடைப்பட்ட காலத்தில் குந்திபோஜன் ஏற்பாடு செய்திருந்த சுயம்வரத்தில் குந்தியை மணந்து கொண்ட பாண்டு, மன்னர்கள் குல வழக்கப்படி மாத்ரி என்ற மற்றொரு பெண்ணையும் மணந்து கொண்டான்.

அண்ணன் திருதராஷ்டிரனுக்குப் பார்வை இல்லாததால் அஸ்தினாபுரத்தைப் பாண்டுவே ஆட்சி புரிந்து வந்தான். இந்நிலையில் காம நோக்குடன் தன் மனைவியரைப் பாண்டு அணுகினால் உடனடியாக அவன் மரணமடைவான் என்று முனிவர் ஒருவர் சாபம் அளித்து விட்டார். அதனால் வாரிசுகள் இல்லாமல் போய்விடுமே என்று அஞ்சியதால் துர்வாசர் உபதேசித்த மந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு குந்தியும் மாத்ரியும் ஐந்து புதல்வர்களைப் பெற்றுக் கொண்டனர். தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய அந்த ஐந்து புதல்வர்களே பாண்டவர்களாவர். பின்னர், முனிவரின் சாபத்தை



– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

**அரக்கு மாளிகை ஒன்றில் பாண்டவர்களையும் அவர்களுடைய தாயார் குந்திதேவியையும் தங்க வைத்ததுடன், அம்மாளிகைக்குத் தீவைத்து அவர்கள் அனைவரையும் கொல்லத் துரியோதனன் சதி செய்தான். சதியை முன்கூட்டியே உணர்ந்து கொண்ட பாண்டவர்களும், குந்திதேவியும் சுரங்கப்பாதை மூலம் சாமர்த்தியமாக உயிர் தப்பினர்.**



மறந்தவனாய்த் தன் இரண்டாவது மனைவி மாத்ரியின் அழகில் மயங்கிய பாண்டு மரணம் அடைந்தான். மனமுடைந்த மாத்ரியும் மாண்டாள். ஒரு முறை குந்திதேவியும் பாண்டவர்களும் துரியோதனனின் சதியை முறியடித்து அரக்கு மாளிகையில் இருந்து தப்பிச் சென்றனர். ஏகசக்ர புரம் என்ற ஊரில் பாண்டவர்கள் தங்களின் அடையாளத்தை மறைத்துக் கொண்டு வாழ்ந்து வந்த பொழுது நடந்த சுயம்வரத்தில் வென்ற அர்ஜுனன் திரௌபதியைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தான்.

பின்னர் இந்திரப்பிரஸ்தம் என்ற நகரத்தை நிர்மாணித்து ஆட்சி புரிந்து வந்த தருமர், விதி வசத்தால் கௌரவர்களுடன் சூதாட ஒப்புக் கொண்டார். சூதாட்டத்தில் அனைத்தையும் இழந்ததுடன் திரௌபதிக்கும் அவமானம் நேர இருந்த நிலையில் கண்ணபிரானுடைய திருவருளால் அவளுடைய மானம் காப்பாற்றப்பட்டது. பாண்டவர்களே தன்னுடைய சகோதரர்கள் என்பதை அறியாத கர்ணன் துரியோதனனின் தவறுகளையெல்லாம் ஆதரித்தான். இதைத் தொடர்ந்து பீமனும், அர்ஜுனனும் கௌரவர்களைக் கொல்வதாகச் சபதம் செய்தனர்.

அஞ்ஞான வாசத்திற்குப் பிறகு கௌரவர்கள் – பாண்டவர்கள் இடையிலான மகாபாரதப் போர் தொடங்கியது. கிருஷ்ண பகவானின் ஆலோசனைப்படி சூரிய பகவானின் அருளால் தனக்கு முதலில் பிறந்த கர்ணனிடம் சென்ற குந்தி தேவி, போரில் அவன் பாண்டவர்களைக் கொல்லக்கூடாது என்று வாக்குறுதி தரும்படி கேட்டுக் கொண்டாள். கர்ணனும் போரில் தான் வீர மரணம் எய்திய பிறகே தன்னுடைய பிறப்பின் ரகசியத்தை உலகறிய வெளியிட வேண்டும் என்று குந்தி தேவியிடம் வேண்டிக் கொண்டான். இதனால், கர்ணன் மாண்ட பின்னரே அவன் யார் என்பதைக் குந்திதேவி அனைவருக்கும் தெரிவித்தாள். மகாபாரதப் போரில் பாண்டவர்களின் வெற்றி பெருமளவில் வெறுப்புணர்வே விரவியிருந்தது.

தருமர் அஸ்தினாபுரத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற சில வருடங்களுக்குப் பிறகு திருதராஷ்டிரனும் காந்தாரியும் வனப்பிரஸ்த தர்மத்தைக் கடைபிடிப்பதற்காக வனத்திற்குச் சென்று தவ வாழ்க்கை வாழ்ந்து வனத்திலேயே முக்தியடைந்தனர்.

பொதுவாக, அரச குலத்தில் பிறந்த பேரரசர்களுக்கு வாழ்க்கைப் படும் பெண்களின் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக மட்டுமே இருக்கும் என்று அனைவரும் நினைக்கக் கூடும். ஆனால் அன்பு, பாசம் ஆகியவற்றுடன் பழியுணர்வு, துரோகம், பங்காளிச் சண்டை ஆகியவற்றாலும் பாதிக்கப் படும் அரச குலப்பெண்களின் வாழ்க்கையும் ஒரு போர்க்களமாகவே இருக்கும் என்பதற்குக் குந்தி தேவியின் சரித்திரமே சாட்சி என்பதை மகா பாரதம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

தொடர்ந்து அலசுவோம்...

# பிணிக்கு மருந்து

**பண்டிதர்**
**கு. அரங்கநாதாச்சாரியார்,**
**வரிச்சிக்குடி.**



மன்னும் இவ்வுலகில் வாழப் பல செல்வங்கள் வேண்டியிருந்தாலும் அவற்றுள் ஒன்று மிகச் சிறந்ததாக உள்ளது. அது எது எனில் நோயற்ற வாழ்வே.

அதனால்தான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் பழமொழி அறிகின்றோம். வாழ்வில் பல இன்னல்களைத் தோற்றுவிப்பது நோயாகும். இந்த நோய் இரு வகைப்படும். ஒன்று உடலுக்கு, உடல் உறுப்புகட்கு வருவது. மற்றொன்று உள்ளத்திற்கு வரும் நோயாகும். இந்நோய்கள் நீங்கினால் தான் நலமாக வாழ முடியும். நோய் எனும் போது பிணி என்னும் சொல் நினைவிற்கு வருகிறது.

*வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்*
*பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு*
*பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்*
*ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே.*

என்றார் தொண்ரடிப்பொடி ஆழ்வார். இங்கு நோய் என்பது பிணி என்னும் சொல்லால் குறிக்கப் பெறுகிறது. நோய், பிணி எனும் இரு சொற்கட்கும் பொருள் ஒன்றே. எனினும், ஒரு வேறுபாடு உள்ளது.

தலைவலியோ, வயிற்று வலியோ போன்ற நோய் வந்தால் உடன் மருந்து உட்கொள்கிறோம். வலி நீங்கிவிடுகிறது. இயல்பு நிலை மீள்கிறது. ஆனால் பிணி என்பது அத்தகையது அன்று.

உலக வழக்கில் இரண்டு பிணிகளைக் கூறுகின்றோம். ஒன்று பசிப்பிணி. மற்றொன்று கருப்பிணி. பசி என்பது ஒரு நோயே எனலாம். பசி நீங்க உணவு தேவைப்படுகிறது. உண்டதும் பசி தணிகின்றது. ஆனால் நீங்கி விடுவதில்லை. சில மணிகள் கழித்து மீண்டும் பசி தலையெடுக்கிறது. மீண்டும் உணவு தேவைப்படுகிறது.

பிறந்தவுடன் குழந்தை அழத் தொடங்குகிறது. தாய்ப்பால் குடித்ததும் அமைதி கொள்கிறது. மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை உணவின்றி வாழ்தல் இயலாது. இறந்த பின்பும் வாய்க்கரிசி போடும் பழக்கமும் காண்கிறோம் அல்லவா!

யான் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. சாப்பாடு என்பது இரு சொற்களின் சேர்க்கையாகும். சா என்பது சாதலைக் குறிக்கும். பாடு என்றால் துன்பம். சாகின்ற வரை இந்தத் துன்பத்தை அதாவது உண்ணும் நிலையை அனுபவிக்க வேண்டி உள்ளது. பசி பற்றி ஒரு பாடல் அடியேன் நினைவிற்கு வருகிறது.

*"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை*
*தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்*
*கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்*
*பசிவந்திடப் பறந்து போம்"*

இப்பாட்டின்படி பார்த்தால் நமக்குப் பசி வந்ததும் உணவு உட்கொள்ளாமல் போனால் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட நிற்கிறது. நமக்கு நன்மை தரும் பலவும் நம்மிடமிருந்து நீங்கி விடுகின்றன. பசி கொடிய நோய். எனினும் அது நம்மைத் தற்காலிகமாகப் பிணித்துத் தளர்த்தி மீண்டும் பிணித்து விடு

கிறது. நோய் வந்தால் தீரும். பசி என்னும் பிணி வந்தால் தற்காலிகமாகத்தான் தீரும். இதே போன்று கருப்பிணியும் ஆகும்.

இப்பிணி பசிப்பிணியைக் காட்டிலும் கடுமை யானது. பிரசவ வலி மிகுந்த துன்பத்தைத் தருகிறது. பிரசவிக்கும் போது, ஒரு பெண் இனி குழந்தை பெற்றுக் கொள்ளவே கூடாது என்று நினைக்கிறாள். ஆனால், பெற்ற குழந்தையைப் பார்த்ததும், அதன் அழகில் வளர்ப்பில் மயங்கி, மீண்டும் கருவுறுகின்றாள். இப்பிணி மீண்டும் பிணிக்கின்றது.

நோய் என்பது முற்றிலும் நீங்கக் கூடியது. பிணி என்பது தற்காலிகமாகத்தான் நீக்கப்படுகிறது. எனவே நோயைக் காட்டிலும் பிணி வலிமை உடையது. இன்னொரு பிணி உள்ளது. நான் எனும் சொல் இரு பகுப்புக்களை உடையது. ஒன்று உடல். இது கண்ணுக்குத் தெரிகின்றது. ஐம்புலன்களாலும் செயல் படுகின்றது. இன்னொன்று உடலை இயக்கும் ஆன்மா ஆகும். இதனை உள்ளம் என்றோ உயிர் என்றோ கூறலாம். இது கண்ணுக்குத் தெரிவதில்லை.

உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் கூடி, உயிர் மெய் ஆவதுபோல, உடலும் உயிரும் சேர்ந்து இயங்கக் காண்கின்றோம்.

நாம் எல்லாம் மனிதப் பிறவி கொண்டுள்ளோம் என்பது உண்மை. புழு, பூச்சி முதல் மனிதன் வரை, பல்வேறு நிலையில், ஆன்மா உடல் பெற்று வாழக் காண்கின்றோம்.

பிற என்பது நமக்குச் சொந்தமானது அன்று என்று தானே தோன்றுகிறது. இயல்புநிலை விடுத்து வேறு நிலையில் அதாவது பிரிதான நிலையில் இருப்பதுதான் பிறவியாகும்.

அப்படியானால் நம் இயல்பான நிலை என்ன? ஏன் பிறவி எடுத்துள்ளோம் எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. எந்த ஒரு செயலுக்கும் விளைவு உண்டு. பசிக்கின்றது. உண்கின்றோம். பசி நீங்கு கின்றது. கற்கின்றோம். அறியாமை நீங்குகின்றது.

இங்ஙனம் நாம் நம் வாழ்வில் புரியும் தீமையோ நன்மையோ எதுவாயினும் அதன் பலனை



*ஊரும் சதமல்ல: உற்றார் சதமல்ல; உற்றுப் பெற்ற*
*பேரும் சதமல்ல; பெண்டிர் சதமல்ல; பிள்ளைகளும்*
*சீரும் சதமல்ல; செல்வம் சதமல்ல; தேசத்திலே*
*யாரும் சதமல்ல; நின்தாள் சதம் கச்சியேகம்பனே!*

– பட்டினத்தார்

பொருள் : திருக்காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே! மக்கள் வசிக்கின்ற ஊர்களும் நிலை யானது அன்று! வினையால் வந்துள்ள உற்றார்களும் நிலையானவர் அன்று! தவங்கிடந்து நம்மை ஈன்ற தாய் தந்தையும் நிலையானவர் அல்லர்! மனைவி, குழந்தை கள், புகழ், பொருள் என எவையும் நிலையானது அன்று! மேலும், இவ்வுலகில் எவரும் நிலையான வர் அல்லர்! இறைவா! ஏகாம்பரநாதனே நினது திருவடிகளே நித்தியம் நிலையானது.

வாழ்வியலுக்கான கருத்து : ஊர் முதலிய பொருட்சார்பும், உற்றார் முதலிய உயிர்ச்சார்பு களும், மாயைகளே! அவற்றைப் பொருளாகக் கொண்டு அவற்றிலேயே அழுந்தி விடாமல், இறைவன் ஒருவனே நிலையானவன்! எனவே, இறைவன் திருவடிகளைப் பற்றிக் கொண்டால் பிறப்பு, இறப்பு என்ற துன்பங்களை அடைய மாட்டார்கள்.



அனுபவிக்க நேர்கிறது. அந்தச் செயலை கர்மம் என்பர். இங்கே நம்மாழ்வார் கூற்று கவனிக்கத் தக்கது. சடகோபரிடம் மதுரகவியார் ஒரு வினா தொடுத்தார். "செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்பதே அவ்வினா. அதற்கு நம்மாழ்வார் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என மொழிந்தார்.

ஞானமற்ற ஜடப்பொருளான உடம்பில் நுட்பமான ஆன்மா புகுந்தால், அதாவது பிறவி கண்டால், அது எவ்வாறு வாழும் எனக் கேட்டதற்கு, அவரவர் செய்த வினையின் பயனாகப் பிறவி கண்டதால், அவரவர் செய்த புண்ணிய பாவங்களை அனுபவிக்கவே பிறவி கண்டுள்ளோம். வினைகளை அனுபவிக்க உடல் தேவைப்படுகிறது. அவற்றை தான் விதி என்கிறோம். மனிதப் பிறவியே உயர்ந்தது. மற்ற உயிர்களைக் காட்டிலும் நாம் பகுத்தறிவு, அறம், நீதி போன்ற பண்புகளைப் பெறும் வாய்ப்பு இம்மனிதப் பிறவியிலேயே பெறமுடிகிறது. நாமும் இறைவன் படைப்பில் தோன்றியதால் அவ்விறைவன் மாட்டே செல்ல வேண்டுமன்றோ.

ஆனால் நாம் அதனை மறந்து, உலக இன்ப துன் பங்களுக்கு ஆட்பட்டு வாழ்வதே வாழ்வு என்பதால், எடுத்த உடலுக்கு ஆயுள் குறித்த காலமே ஆதலால், நம் வினைப்பயனை ஏறிட மீண்டும் பிறவி காண்பதால் அப்பிறவியை பிறவிப்பிணி எனலாம். இப்பிறவிப் பிணியே, மற்ற பிணிகளிலும் கொடியது எனச் சான்றோர் கூறுவர். எனில் இப்பிறவிப்பிணி நீங்க என்ன மருந்து உள்ளது என்பதை பெரியோர் வாழ்வாலும் வாக்காலும் அறியலாகும்.

ஒருவன் எல்லா தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே பற்றினால், அவனுடைய எல்லாத் துன்பங்களையும் போக்குவதாக கண்ணன் கீதையில் தெரிவித்துள்ளான். தர்மங்களை, அதாவது புண்ணியச் செயல்களைக் கைவிடுதல் அத்தனை எளிதன்று. செயல்களின் பயன்களை எதிர் பார்ப்பது இயல்பாகி விடுகிறது. எம்பெருமானிடம் சரண் புகுவது பிறவி நீங்க வழியாகும்.

வீடு என்பது விடுதலையைக் குறிப்பது. எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டு விலகுவதே வீடாகும். அவ்வீட்டை எய்துவதற்கு மனம், மொழி, மெய்யால் இறைவனைப் பற்றிச் சிந்திப்பதே ஆகும்.

*"தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகு தருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்"* – என்கிறாள் ஆண்டாள். மங்கை மன்னனும் உய்யும் வழியாக அதாவது பிணி நீங்க *"நாராயணன் நாமமே நவில்க"* என்கிறார்.

*"துஞ்சும் போது அழைமின், துயர் வரில் நினை மின், துயரிலீர் சொல்லினும் நன்றாம்; நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா எனும் நாமம்"* என்கிறார். இம்மையிலும் மறுமையிலும் நன்மை பயக்கும் என்பதை பின்வரும் பாடலால் உணரலாம்.

*"குலம் தரும் செல்வம் தந்திடும்*
*அடியார் படு துயர் ஆயின எல்லாம்*
*நிலம் தரும் செய்யும் நீள் விசும்பு அருளும்*
*அருளொடு பெரு நிலம் அளிக்கும்*
*வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற*
*தாயினும் ஆயின செய்யும்*
*நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்*
*நாராயணா என்னும் நாமம்"*

இறைவனுக்குத் தொண்டு புரிவது நம் பிறவி நீங்க வழிவகுக்கும். *"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று"* என்கிறார் கோதை. *"மற்றெல்லாம் பேசிடும் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை"* என்கிறார் பரகாலர்.

இறைவனுக்குத் தொண்டு புரிவதும் இறை அடியாருக்கு பணிபுரிவதும் வீடு பெற வழி வகுக்கும் எனச் சான்றோர் இயம்புவர். பராங்குசர் தம் திருவேங்கடப் பதிகத்தில்,

*ஓயும் மூப்புப் பிறப்பு இறப்புப் பிணி*
*வீயுமாறு செய்வான் திருவேங்கடத்து*
*ஆயன் நாள் மலராம் அடித்தாமரை*
*வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே*

என விளம்புதலால் மூப்பு, பிறப்பு, இறப்பு இவற்றைப் பிணியெனக் கொண்டு, இப்பிணி நீங்க வேங்கடவனை, வாயாலும் மனத்தாலும் உணரப் பிணி மீண்டும் பிடிக்காமல் நீங்கும் என்பர். அவற்றை உணர்ந்து வாழ்வதே வாழ்வின் பயன் என்பதைச் சிந்திப்போம். செயல்படுவோம். சீர் பெறுவோம்.

## வாழ்வைச் செழிக்க வைக்கும்

# ஆனித் திருமஞ்சனம்

பகவான் நடராஜர் பிரபஞ்ச நடனக் கலைஞர். இவரது நடனம் "தாண்டவம்" என்றும் அழைக்கப் படுகிறது. அவரது நடனம் பற்றிய விவரங்கள் பல்வேறு நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.


மக்களைக் காக்கவும், பூமியில் அமைதியையும் செழிப்பையும் நிலைநாட்டவும் அவர் நடனமாடு கிறார் என்று நம்பப்படுகிறது. பிரதோஷ நாட்களில் நடராஜர் வடிவில் சிவபெருமான், நந்தி பகவானின் கொம்புகளுக்கு இடையே நடனமாடுவார்.

ஆனித் திருமஞ்சனம் என்பது சிவாலயங்களில் நடராசருக்கு ஆனி மாதத்தில் அபிஷேகம் செய்யப் படும் நாளாகும். ஆனி மாதம் உத்திர நட்சத்திரத் தில் இந்நாள் கொண்டாடப்படுகிறது. சிதம்பரம் நடராசர் கோயிலில் ஆனி உத்திரத் திருவிழா கொண்டாடப்படுகிறது. ஆனித் திருமஞ்சனத் தன்று நடராசருக்கு அபிஷேகங்கள் செய்யப் படுகின் றன.

சிதம்பரத்தில் நடராஜப் பெரு மானுக்கு நடத்தப் படும் ஆனித் திருமஞ்சன விழா மிகவும் பிரபலம் ஆகும். நடராஜப் பெருமான் வருடத்தில் ஆனி மற்றும் மார்கழி மாதத்தில் மட்டுமே வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். இந்த ஆனி உத்திரமே ஆடல் வல்லானுக்கான விழாவாக ஆனித் திருமஞ்சனம் என்ற பெயரில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆனி மாதம் பல சிறப்பு களைத் தன்னுள் அடக்கி உள்ளது.

அக்னி நட்சத்திரம் வைகாசியில் முடிந்தாலும் ஆனியில் கோடை வெப்பம் மிகுந்து காணப் படுவதால், இந்த வெப்ப அலையிலிருந்து நடராஜப் பெருமானைக் குளிர்விப்பதற்காக ஆனித் திருமஞ்சன விழா நடைபெறுகிறது. பால், தயிர், பன்னீர், பஞ்சாமிர்தம், நெய், சந்தனம், இளநீர் என 16 வகை குளிர்ந்த பொருட்களைக் கொண்டு ஆனித் திருமஞ்சனம் செய்கின்றனர்.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் பொழு தாகும். தேவர்களுக்கு வைகறை மார்கழி மாதம். காலைப் பகுதி மாசி மாதம், உச்சிக் காலம் சித்திரை மாதம், மாலைப்பகுதி ஆனி மாதம், இரவுப்பகுதி ஆவணி மாதம், அர்த்த சாமம் புரட்டாசி மாதம் என்று கணக்கிடப் பட்டுள்ளது.



**ஓவியம் காணிக்கை**
**திரு.பா.சங்கர்,**
**காஞ்சிபுரம்,**
**7708133650**

சந்தியா காலங்களான ஆனி–மார்கழியே இறை வழிபாட்டுக்கு உகந்த மாதங்களாகக் கொள்ளப் படுகின்றன.சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் ஆடும் ஆனந்தத் தாண்டவம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்து தொழில்களையும் உணர்த்துகிறது. வலது திருக்கரத்தில் உள்ள உடுக்கை படைத்தலையும், உயர்த்திய வலது திருக்கரம் காத்தலையும், இடது திருக்கரம் அழித்தலையும், ஊன்றிய திருப் பாதம் மறைத்தலையும், மற்றொரு தூக்கிய நிலையில் உள்ள திருப்பாதம் அருளையும் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆனி உத்திர நாளில் தான் சிவ பெருமான், நமக்கெல்லாம் திருவாசகத்தைத் தந்த மாணிக்கவாசக ருக்கு குருந்தை மரத்தடியில் உபதேசம் செய்தார். இந்த ஆனித் திருமஞ்சன நாளின் வைகறைப் பொழுதில் உபதேசக் காட்சி விழா நடத்தப்படுகிறது. ஆவுடையார் கோயிலில், இந்த ஆனித் திருமஞ்சன விழா முக்கியத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. மாணிக்கவாசகர் இந்த நன்னாளில் வெள்ளித்தேரில் மாடவீதி உலா வந்து அருள் பாலிக்கிறார். நடராஜப் பெருமானின் ஆனித் திருமஞ்சன தரிசனம் கண்டால் பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாகவும், தம்பதிகளுக்கு சுகமான வாழ்வு கிடைப்பதாகவும், கன்னியருக்கு நல்ல இடத்தில் திருமணம் அமைவதாகவும் நம்பப்படுகிறது.

**– திரு. ரா. ஹரிசங்கர், கும்பகோணம், 9940172897.**



# புத்தக மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்தல வரலாறு |
| ஆசிரியர் பெயர் | : | திரு. பி.எல். முத்துக்குமரன் |
| பக்கங்கள் | : | 128 |
| விலை | : | ரூ.120/- |
| கிடைக்குமிடம் | : | முல்லைப் பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 040. செல் – 98403 58301. |

இந்நூல் திருமலையில் திருமலையப்பனாகத் திகழும் திருவேங்கடமுடையானின் வரலாற்றையும், அவனை வழிபடும் முறைகளையும், அவனைப் போற்றியுரைக்கும் வழிபாட்டுப் பாடல்களையும் தொகுப்பாகக் கொண்டுள்ளது. “வேண்டுவோருக்கு வேண்டியதை அருளும் திருமலை திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்தல வரலாறு மற்றும் வழிபாட்டுக்குரிய ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்தோத்திர மலர்” என்ற நீண்ட பெயரைத் தாங்கிய இந்நூல் அளவில் சிறியது. பொருளடக்கத்தில் நெடியோன் போல் பெரியது.

1) ஸ்ரீவேங்கடேச்வர மகாத்மியம், 2) சப்த பர்வதங்கள், 3) திருமலை தரிசனம், 4) ஆழ்வார்கள் அளித்த அமுதம், 5) திருவேங்கடத்து திருப்புகழ், 6) ஸ்ரீவேங்கடச ஸுப்ரபாதம், 7) ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்ரம், 8) ஸ்ரீவேங்கடேச ப்ரபத்தி, 9) ஸ்ரீவேங்கடேச மங்களாசாஸனம், 10) ஸ்ரீவேங்கடேஸ்வர பூஜா மகாத்மியம், 11) அஷ்டோத்ர அர்ச்சனை, 12) திருவேங்கடத்துத் திருப்புகழ், 13)ஸ்ரீவேங்கடேஸ்வர கோவிந்த நாமங்கள், 14) சொல் விளக்கம் என்ற தலைப்புகளில் திருவேங்கடத்தானின் திருப்புகழை இந்நூல் எடுத்துரைக்கிறது.

இந்நூலைப் படிப்போர் திருமகளின் அருளையும், திருவேங்கடமுடையானின் பேரருளையும் மிகுதியாகப் பெற்று நோயின்றி செல்வ வளத்துடன் நீண்ட நாள் வாழ்வர் என்பது திண்ணம்.

**– பேராசிரியர் அரங்க. இராமலிங்கம், சென்னை.**

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -95

### இடமிருந்து வலம்

1. கண்ணனுக்குத் தாலாட்டு பாடிய ஆழ்வார்......(6)
8. தூது சென்ற கண்ணன் தங்கியது ....(4) இல்லம்.
13. வனவாசம் சென்ற சீதா ராமனோடு உடன் சென்றவர்....(5)
14. திருச்சானூரில் தாயார் திருநாமம் ....(5).
24. சுசீந்திரத்தில் அருள்பவர்....(9)

### வலமிருந்து இடம்

2. பக்தப் பிரகலாதனை காக்க இறைவன் எடுத்த அவதாரம்...(6)
3. கண்ணன் குடையாகப் பிடித்த மலை.....(8)
7. பிதாமகர்....(4)
11. வட இந்தியாவில் அவதரித்த கிருஷ்ண பக்தை.....(4)
12. பாண்டவர்களில் மூத்தவர்....(4)
17. திருவேங்கடவனின் தாயார்....(6)
22. திருமாலின் வலது மேல் திருக்கரத்தில் திகழ்வது....(5)
25. ஸ்ரீராமன் வனவாசம் செல்ல காரணமான சிற்றன்னை....(3)

### மேலிருந்து கீழ்

4. இராமரின் பாதுகைகளை வைத்து ஆட்சி புரிந்தவர்.....(4)
5. திருவேங்கடவனின் திருநட்சத்திரம்....(5)
6. பகவான் தன் தேவியை மடியில் வைத்து அமர்ந்துள்ள நிலையில் அவரின் திருநாமம்...(8)
10. கிருஷ்ண பகவானின் சங்கு....(7)
15. மகாபாரதத்தை இயற்றியவர்...(4)
16. வாமனரால் வதம் செய்யப் பட்டவன் ....(3) சக்கரவர்த்தி.
18. ஸ்ரீகிருஷ்ணர் ....(5)தலையின் மீது நர்த்தனமிட்டார்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | 2 |
| | | | | | | | 3 | ■ | | 4 | ■ |
| 5 | ■ | 6 | ■ | | | | 7 | 8 | 9 | | |
| | ■ | | | 10 | | 11 | | | | 12 | ■ |
| | ■ | | ■ | | 13 | | | | | | |
| | | | ■ | | 14 | | | | | ■ | |
| | | | | | 15 | | 16 | | | 17 | |
| | | | | | | ■ | | 18 | | ■ | |
| | | | | | | ■ | | | | ■ | |
| | | | | | | ■ | ■ | | 19 | ■ | |
| | 20 | ■ | 21 | ■ | ■ | | | | | 22 | 23 |
| 24 | | | | | | | | | | | 25 |

தொகுப்பு : திருமதி மு.இராஜகுமாரி, ஆரணி, 9976238430

புதிருக்கு விடை அறிய 25ஆம் பக்கம் பார்க்கவும்...

### கீழிருந்து மேல்

9. பகவானின் எடைக்கு சமமாக ....(3) இலையை ருக்மணி பிராட்டி மறுதட்டில் இட்டார்.
19. திருமால் ஆமையாக அவதரித்தது....(3) அவதாரம்.
20, ஸ்ரீபத்மாவதி தாயாரின் தந்தை....(6)
21. இராமரின் பெயர்களுள் ஒன்று....(5)
23. கண்ணனின் ...(7)இசைக்கு கோகுலத்தில் இருந்த அனைத்து உயிரினங்களும் மயங்கின.
24. கண்ணனின் பெயர்களில் ஒன்று....(5)

### வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...

**திருமலை மலைவழிச் சாலையில் வாகனம் ஏறும் பொழுது 28 நிமிடத்திற்கு முன்னதாக ஏறினாலும், இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக இறங்கினாலும் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.**



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை, 8838252312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 11 : "த்யான ஹேயாஸ்தத்வ்ருத்தய:"**

கிரியா யோகத்தால் கிலேசங்களை பலவீனப்படுத்த முடியாமல் போனால் தியான யோகத்தைத் தொடர்ந்து செய்திடல் வேண்டும். அதன் பின் அணு அளவு மிஞ்சியிருந்தாலும் சித்தம் மறைந்து ஆத்மா பிரகாசிக்கும்.

**சூத்திரம் 12 : "க்லேசமூல: கர்மாசயோ த்ருஷ்டா த்ருட - ஜன்மவேதனீய:"**

சகல கிலேசங்களுக்கும் மூல காரணமாக புண்ணிய பாவ கர்ம பலன்கள் அனைத்தும் சித்தத்தின் அடித்தளத்தில் சமஸ்காரங்களாக அனுபவிப்பதற்காக இருப்பவை. கிலேசங்கள் உருவாக அவித்யா முதலிய காரணங்கள் இல்லாத பட்சத்தில் கர்மாசயம் என்கிற சேமிப்பு கிடங்கு உருவாகாது.

**சூத்திரம் 13 : "ஸதி மூலே தத்விபாகோ ஜாத்யாயுர் போகா:"**

சித்தத்தில் கிலேசங்களின் வேர்கள் நன்கு பதிந்து விட்ட நிலையில் சுக துக்கங்களின் சேமிப்பால் உருவான கர்மாசயம் மூன்று விதமாக செயல்முறையில் வருகிறது. 1) ஜாதி – புழு பூச்சி, பறவை, மிருகம், மனித இனம் முதல் கர்மத்திற்கு தக்கவாறு பிறப்பெடுப்பது. 2) ஆயு–அந்தந்த பிறவிகளின் ஆயுட்காலம் வரை, 3) போகம் – எந்த அளவிற்கு சுகதுக்கங்களை அனுபவிக்க வேண்டும் என்பது நிச்சயிக்கப் படுகிறது.

**சூத்திரம் 14 : "தேஹ்லாத பரிதாப பலா: புண்யா புண்யஹேதுத்வாத்"**

மேற்சொன்னவை இனம், ஆயுள், போகம் மூன்றும் ஜீவனுக்கு சுக துக்கங்களைக் கொடுக்கின்றன. இதன் காரணம் ஜீவன் செய்த புண்ணிய பாவ கர்ம பலன்களே அந்த விளைவுகளை உண்டாக்குகின்றன.

**சூத்திரம் 15 : "பரிணாமதா பஸம்ஸ்கார துக்னகர் குணவ்ருத்தி - விரோதாச்சு துக்கமேவ ஸ்ர்வம் விகேகின:"**

1) பரிணா துக்கம், 2) தாப துக்கம், 3) சம்ஸ்கார துக்கம், 4) குணவிருத்தி விரோதத் துக்கம் ஆகிய 3 வகை துக்கங்கள் இருப்பதானாலும், விவேகமுள்ள ஞானிக்கு எல்லாவித கர்ம பலன்களும் துக்ககரமானவையே.

**சூத்திரம் 16 : "ஹேயம் துக்கமனாகதம்"**

இந்த சுகதுக்கங்களை எப்படி நாசப்படுத்துவது எனில் இந்த முற்பிறவிக்கு முன் நிகழ்ந்த பிறவிகளில் கர்ம பலன்களை அனுபவிக்க வேண்டிய வினைப் பயன்களும் தியான யோகத்தில் அழிந்து விட்டன.

**சூத்திரம் 17 : "த்ரஷ்ட்ருத்ருஷ்யயோ: ஸம்யோகா ஹேயஹேது:"**

தவிர்க்க வேண்டிய துக்கத்தின் மூலகாரணம் யாதெனில் சர்வ சாட்சியாக காண்பவனான பரம புருஷனுக்கும் காட்சிப் பொருளாக முக்குணங்கள் கொண்ட பிரக்ருதி சக்தி சித்தத்திற்கும் தொடர்பு கொண்டிருப்பதால் துக்கம் உண்டாகிறது. நான் என்ற அகங்காரம் கரைந்து போனால் ஆத்மா மட்டுமே பிரகாசிக்கும்.

**சூத்திரம் 18 : *''ப்ரகாச க்ரியாஸ்திதி சீலம் பூதேந்த்ரியாத்மகம் போகா பவர்கார்த்தம் திருஷ்யம்:''***

சத்வம், ரஜசம், தாமஸம் ஆகிய முக்குணங்களின் பிரத்யட்சமாக தோன்றும் செயல்கள் எல்லாம் த்ருஷ்ய என்கிற காட்சிப் பொருளாக சிருஷ்டியில் உள்ளன. சத்வம் தெளிவும் பிரகாசமும், ரஜஸ் வேகமும் தீவிரமும், தாமஸ் செயலற்றும் இருக்கும். இவை மூன்றும் பிரக்ருதி சக்தியில் சமமாக உள்ளன. பிரக்ருதி சக்தியிலிருந்து மஹத்துவம் உருவாகாது. அதிலிருந்து உருவான அஹம் மூன்று வகை குணங்களாகப் பிரிந்தது.

**சூத்திரம் 19 : *''விசேஷா விசேஷலிங்க மாத்ராலிங்கானி குணபர்வாணி:''***

இந்த மூன்று குணங்கள் நான்கு நிலைகளில் சிருஷ்டி காரியங்கள் நடைபெறுகின்றன. 1) விசேஷம் –பஞ்ச பூதங்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்ச கர்மேந்திரியங்கள், சிந்திக்கும் மனம், புத்தி பிரகடனமாகின்றன. 2)அவிசேஷசம் – பஞ்ச தன்மாத்திரைகள் அடங்கிய இவை ஸ்தூல மகா பூதங்களுக்கு காரணமாகிறது. 3) லிங்க மாத்ரம் – மேற்சொன்ன 22 தத்துவங்களுக்கும் மஹத் தத்துவம் காரணமாக இருக்கிறது. 4) அலிங்கம் – மஹத் என்கிற பேராற்றல்களை வெளிப்படுத்தும் சக்தியே பிரக்ருதி எனப்படுகிறது. பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன் இது வெறும் பேராற்றல்கள் படைத்ததாக இருப்பதையே அலிங்கம் என்கிறார்கள்.

**சூத்திரம் 20 : *''த்ரஷ்டா த்ருஷிமாத்ர கத்தோ அபிப்ரத்யயானுபஷ்ய''***

உயிர் துடிப்புள்ள சேதனப் பொருளான ஆத்மா முக்குணங்களற்று தூய்மையானது, மாறுதல் இல்லாதது. அவித்தை காரணமாக பிரக்ருதியுடன் தொடர்பு கொண்டுள்ளது. சித்தத்துடன் தொடர்பு கொண்டு சிருஷ்டி சக்தியின் காரியங்களை பார்க்கிறது. அதுவரை அதை ''த்ரஷ்டா'' – காண்பவனை ஆத்ம புருஷன் என அழைக்கிறார்கள். சித்தம் கரைந்த பின் பிரக்ருதியின் தொடர்பற்று ஆத்மா தனியாக பிரகாசிக்கிறது.

**சூத்திரம் 21 : *''தகர்த்த ஏவ த்ருஷ்யஸ்யா ஆத்மா:''***

ஜீவாத்மாவானது சிருஷ்டித்த உலக விஷயங்களை அனுபவித்து வைராக்கியம் அடைந்த பின் அதற்கு மோட்சம் கொடுப்பதற்காகவே இயங்குகின்றன. சிருஷ்டி சக்தி, ஜீவாத்மாவுக்கு மோட்சம் தந்தபின் சிருஷ்டிக்கப்பட்டவை நிலையற்றவையாக இருப்பதால் ஞான சொரூபமான ஆத்மா முன் நில்லாது மறைந்து விடுகிறது.

**சூத்திரம் 22 : *''க்ருதார்த்தம் பிரதி நஷ்டமப்ய நஷ்டம் ததன்யஸாதாரணத்வாத்:''***

பிரக்ருதி சக்தி ஆத்ம புருஷனுக்காக போகம் தந்து அதன்பின் மோட்சம் அளித்தபின் யோக சாதகனுக்கு அந்த பிரபஞ்ச மாயை விலகிப் போகிறது. ஆனால் மோட்சத்தை எட்டாத மனிதர்களுக்கு பிரக்ருதியின் சக்தி இயங்கிக்கொண்டு தான் இருக்கிறது. பிரபஞ்சம் பொய் மாயை என்று சித்தாந்தம் கூறவில்லை. யோகசித்தி பெற்ற யோகிக்கு உலக சிருஷ்டி விஷயங்களின் தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 95க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பெ | ரி | யா | ழ் | வா | ர் | ம் | ம | ம் | சி | ர | 2 ந |
| ரி | கி | ன | த | த் | ர் | வ | 3 கோ | | ள | 4 ப | |
| 5 தி | | 6 ல | | ர் | ம | ஷ் | 7 பீ | 8 வி | 9 து | ர | ர் |
| ரு | | க்ஷ் | ய் | 10 பா | ரா | 11 மீ | ர் | ம | ரு | 12 த | |
| வோ | | மி | | ஞ் | 13 ல | ஷ் | ம | ண | ன் | ன் | ல் |
| ண | ன் | நா | | ச | 14 ப | த் | மா | வ | தி | | ழ |
| ம் | ஜ | ரா | ன் | ஜ | 15 வி | தே | 16 மா | ள | கு | 17 வ | கு |
| ன் | ரா | ய | ம | ன் | யா | | வ | 18 கா | ம | | ங் |
| ர | ச | ண | ரா | ய | ச | | லி | ளி | ர் | | லா |
| த | கா | ர் | ஜா | ம் | ர் | | | ங் | 19 கூ | | ல் |
| மோ | 20 ஆ | | 21 ரா | | | ம் | ர | க | க் | 22 ச | 23 பு |
| 24 தா | ணு | மா | ல | ய | ப | க | வா | ன் | யி | கே | 25 கை |

**சூத்திரம் 23 :** *''ஸ்வ ஸ்வாமி சக்த்யோ: ஸ்வருபோபலப்திஹேது: ஸம்யோக:''*

ஜீவாத்மாவுக்கும் சிருஷ்டி சக்தியான பிரக்ருதிக்கும் இருக்கும் தொடர்பானது காட்சியாக விளங்கும் ஆத்ம புருஷனுக்காக ஏற்பட்டது. இரண்டின் சம்பந்தம் "ஸ்வ ஸ்வாமி பாவ சம்பந்தம்" என்று யோகத்தில் கூறுகிறார்கள். அதாவது பிரக்ருதி தன்னுடைய ஸ்வாமி ஆத்மா ஆகிறது.

**சூத்திரம் 24 :** *''தஸ்யஹேதுரவித்யா''*

உண்மையை அறியாததால் அஞ்ஞானத்தால் இத்தொடர்பு இருப்பது போலத் தெரிகிறது. இந்த சேதன ஆத்ம புருஷன் மாறுதல் இல்லாதது. எதிலும் ஒட்டாது. அஞ்ஞானம் என்ற அவித்யா உண்மைக்கு புறம்பானது. அவித்யா என்று சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சம் மற்றவர்களுக்காக இருந்து கொண்டு தான் இருக்கும்.

**சூத்திரம் 25 :** *''ததபாவாத் ஸம்யோகாபாவோ ஹானம் தத்ருஷே: கைவல்யம்''*

தன்னில் ஆத்ம ஜோதியை உணர்ந்த ஞானத்தால் மேற்சொன்ன அவித்யா என்ற அஞ்ஞானம் ஒழிந்து விடுகிறது. அதன் காரணமாக பிரக்ருதி சிருஷ்டி விஷயத்திற்கும் ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போய் விடுகிறது. மரண துக்கங்கள் அழிந்து விடும் போது கைவல்யம் என்கிற மோட்ச நிலை கிடைக்கும்.

**சூத்திரம் 26 :** *''விவேகக்யா திரவிப்லவா ஹானோபாய:'*

அவித்யா என்ற கிலேசம் அதாவது அஞ்ஞானம் விவேகக்யாதி என்ற ஞானத்தினால் ஒழிந்து போகும். தியான யோகத்தில் சித்தத்தை விட்டு ஆத்மா வேறுபட்டு தனித்திருக்கிறது என உணரப்படுகிறது. இந்த விவேக்கியாதி ஞானம் இறுதிக்கட்ட சமாதி எட்டும் முன் நிலையில் அவ்வாறு உணரப்படுகிறது.

**சூத்திரம் 27 :** *''தஸ்ய ஸப்ததாப்ராந்தபூமி: பிரக்ஞா'*

விவேககியாதி ஏற்பட்டவுடன் இறுதிக்கட்ட சமாதி கிட்டுவதற்கு ஏழுவிதமான அதீத அறிவு உண்டாகிறது. நிர்மலமான விவேக ஞானத்தால் சித்தத்தை மறைத்திருக்கும் அசுத்தங்களும் சஞ்சலம் தரும் விஷயங்களும் மறைந்து விடுகின்றன. உலக விஷயங்களில் உள்ள சிக்கல்களும் மீண்டும் உதயமாகாமல் இருக்கும்.

சூத்திரம் தொடரும்....

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராணப் பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திரம், சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானைத் தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.



17-04-2024 முதல் 25-04-2024 வரை
ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டாவில்
எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிக்கு
மிகச் சிறப்பாக நடைபெற்ற
பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்

# திருமலை திருவேங்கடராமன் சேவையில் சிரஞ்சீவி அனுமன்

திருவேங்கடராமனின் சேவகனாக அனுமன் இங்கு சேவை சாதிக்கின்றார். ஸ்ரீராமபிரானுக்கு சேவை புரிந்த அனுமன் கலியுக வைகுந்தமாகப் போற்றப்படும் திருமலை திருத்தலத்தில் வெவ்வேறு வடிவங்களில் திருக்காட்சி அளிக்கின்றார்.



## ஸ்ரீஆக்ஞபாலக அனுமன் (இராமர் மேடை)

திருமலையில் திருவேங்கடவன் ஆலயத்தில் ஸ்ரீராமர் மேடையில் கொலு வீற்றிருக்கும் உத்ஸவ மூர்த்தியே ஸ்ரீஆக்ஞபாலக அனுமன் ஆவார். பெரியோர்களோடு பேசும்போது நம் வாயிலிருந்து எச்சில் நீர்த்துளிகளும், நம் சுவாசக்காற்றும் அவர்கள் மீது விழாமல் இருக்க வாய் மீது கை வைத்து உரையாடுவது நம் பண்பாடாகும். அவ்வகையில் ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியின் கட்டளையைக் கேட்டபடி இங்கு தன் திருக்கரத்தை வாய் மீது வைத்த வடிவில் திருக்காட்சியளிக்கின்றார். அதாவது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் கட்டளையை ஏற்கும் வடிவில் உள்ளார் என்பது இதன் பொருள். திருமலையில் ஸ்ரீராமநவமி, ஸ்ரீராமபட்டாபிஷேகம் போன்ற நாட்களில் ஸ்ரீராமருக்கு நடைபெறும் உத்ஸவங்களின் போது நாம் அவரை தரிசிக்கலாம். இவரை தரிசிப்பதனால் பக்தர்களிடையே பணிவு மற்றும் மரியாதையளிக்கும் குணம் பெருகும் என்பது ஐதீகம்.

## ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமி

திருமலையில் திருவேங்கடமுடையானின் திருக்கோயிலுக்கு எதிரில் உள்ள சன்னதி வீதியில் எதிர்முகமாக ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமி கொலுவீற்றிருக்கின்றார். அஞ்சனாத்ரியில் அனுமன் சுற்றித் திரிந்துக் கொண்டு அனைவரையும் பயமுறுத்தி வந்ததினால் அனுமனின் தாயாரான அஞ்சனா தேவி அவரின் திருக்கரங்களுக்கும், திருவடிக் கும் விலங்கிட்டு (பேடி) எங்கும் அசையாமல் வேங்கடவனின் முன் நிற்க வைத்ததாகத் தல புராணம் கூறுகிறது. இவரின் திருப்பாதங்களுக் கும், திருக்கரங்களுக்கும் பேடிகளைப் (விலங்கிட்டு இருப்பது)போன்று இருப்பதால் ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமி என்று அழைக்கப்படுகிறார் என்று தல புராணம் கூறுகிறது. இங்கு கருவறையில் சுமார் ஆறடி உயரம் கொண்ட அனுமன் கொலுவீற்றிருந்து பக்தர்களுக்கு தரிசனம் அளித்து வருகின்றார்.





## திருக்குளக்கரை (கோனேடி கட்டு) அனுமன்

திருமலையில் ஸ்வாமி புஷ்கரணிக்கு (திருக்குளம்) தென் கிழக்கு (ஈசான்ய) மூலையில் அதாவது ஸ்ரீவராக ஸ்வாமி ஆலயத்திற்கு எதிரில் திருக்குளக்கரை அனுமன் சன்னதி அமைந்துள்ளது. திருக் குளத்தின் கரையில் வீற்றிருப்பதால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டதாக அறிய முடிகிறது. மேற்கு நோக்கி அமைந்திருக்கும் இச்சன்னதியில் அனுமன் அஞ்சலி செலுத்தும் வடிவில் திருக்காட்சியளிக்கின்றார். தொடர் ஆண்டு 16ஆம் நூற்றாண்டில் கன்னட ஹரிதாசரான ஸ்ரீவியாசராயரால் பிரதிஷ்டைச் செய்யப்பட்டதாகத் தலபுராணம் கூறுகின்றது.

## ஸ்ரீதலையேறு குன்று அனுமன்

அலிபிரியிலிருந்து திருமலைக்கு நடந்துச் செல்லும் பாதையில் பாதாள மண்டபத்தைக் கடந்த பின்னர் சற்று தொலைவில் ஒரு பெரிய குன்று உள்ளது. இக்குன்றுக்கு தலையேறு குன்று என்று பெயர். இக்குன்றின் மேற்பகுதியில் அனுமன் அஞ்சலி செலுத்தும் வடிவில் திருக்காட்சி அளிக்கின்றார். கீழ்ப்பகுதி குன்றில் பக்தர்கள் தலையையும், முழங்காலையும் வைத்துச் செல்வதால் உண்டான பள்ளங்களை இங்குக் காணலாம். பக்தர்கள் நடைபாதையில் மலையேறும் போதும், ஸ்வாமியைத் தரிசித்து விட்டு மலையிலிருந்து நடந்து வரும் போதும் இக்குன்றில் கொலுவீற்றிருக்கும் அனுமனை வணங்கி தமது தலையாலும், முழங்கால்களாலும் இக் குன்றினைத் தொடுவார்கள். இவ்வாறு செய்வதால் மலை ஏற்றம் மற்றும் இறக்கத்தினால் ஏற்படுகின்ற கால்வலிகள் தெரிவதில்லை என்பதும், துன்பங்கள் உண்டாவதில்லை என்பதும் பக்தர்களின் பெரும் நம்பிக்கையாகும்.




ஜூன் 1ஆம் தேதி ஆந்திர மாநிலத்தில் அனுமன் ஜயந்தியைக் கொண்டாடுவதை முன்னிட்டு ஸப்தகிரி வாசகர்களுக்காக இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது.

- தொகுப்பு : டாக்டர் ஐ.எல்.என்.சந்திர சேகர ராவ்



திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
புஷ்ப யாக மஹோத்ஸவம்
14-06-2024



# சூர்ணோற்சவத்தின் பெருமை

– பேராசிரியர் எம்.எஸ். ரங்காசார்யர்,
சென்னை, 95974 23674.

திருமலை திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருமலையப்ப ஸ்வாமி பிரம்ம உத்ஸவத்தின் 9ஆம் நாள் காலை சூர்ணோற்சவம் நடைபெறும். தொண்டை மண்டலத்தில் பிரம்ம உத்ஸவத்தின் 6ஆம் திருநாள் அன்றும், திருவரங்கம் மற்றுமுள்ள சோழ நாட்டுக் கோயில்களில் கந்தப் பொடி வஸந்தம் என்றும் வழங்கப் பட்டுக் கொண்டாடப்படுகிறது. இந்த விழா 7ஆம் நாளன்று நடைபெறு கிறது. அன்று வீதிப்புறப்பாட்டில் திருச்சந்த விருத்தம் தொடங்கி கண்ணிநுண் சிறுதாம்பு பிரபந்தத்து டன் முடிவுறும். இந்த உற்சவத்தின் போது திருச்சந்த விருத்தப் பிரபந்தம் ஸேவிப்பதன் நோக்கம் பின்வருமாறு

சூர்ண (தூள்,பொடி) உத்ஸவம் என்று வடமொழியில் வழங்கப்படும் திருவிழா. கந்த(வாசனை)ப் பொடி வஸந்தம் என்றே சோழ நாட்டில் வழங்கப்படுகிறது. வைகானஸ, பாஞ்சராத்ர ஆகமங்களில் வாசனைப் பொடி இடிப்பது பெருமாள் முன் சடங்காக நடந்தாலும் பெருமாளுக்கும் அணிவித்து ஸேவார்த்திகளுக்கும் விநியோகிப்பது கொண்டு விழாவில் பங்கு கொள்வோருக்கு உதவுமாறு அருள்வதை உணரலாம். பெரும் திருவிழாக்கள் பெரும்பாலும் வஸந்த காலம் தொடங்கி மழை, பனி இல்லாக் காலத்தில்தான் தொன்மையில் நடந்தன. ஸ்ரீரங்கத்தில் சித்திரை உத்ஸவத்தை ஆதிபிரம்மோத்ஸவம் என்று அழைப்பதில் இருந்து மற்றவை புதியவை என்று அறியலாம். வடநாட்டில் வஸந்த கால ஆரம்பத்தை பண்டிகையாகக் கொண்டாடுவதுடன் வல்லப, கௌடிய மதக்காரர்கள் வீதியில் செல்வது பிரணய கலகம். மேலும், குங்குமப்பூக் கரைசல் கொண்டு அர்ச்சா விக்ரஹம் ஸேவார்த்திகள் மீது தெளித்துக் களி விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இவ் விழாவே ஏக வஸந்தம் என களி ஆட்டமின்றி சோலையில் ஸ்ரீரங்கத் தில் கொண்டாடப்படுகிறது. கந்தப்பொடி வஸந்தம் குங்குமப்பூவுக்கு மாற்றாக வாசனைத்தூள் கொண்டு நடைபெறும் வஸந்தத்தை நினைவுறும் விழா.

கந்தப்பொடி இடிக்கும் சடங்குக்கு இணையாகத் திருச்சந்த விருத்த சந்தை அமையும் என்று அரையர் ஸேவையில் நடந்து வேறு கோயில்களில் ஆகமக்காரர் ஒத்துழைப்பு இன்மையின் வீதியில் செல்வது மாற்றாக அமைந்திருக்கலாம். உத்ஸவ ஈடுபாட்டால் விளைந்த சூட்டைத் தவிர்க்க இறைவன் அளிக்கும் மருந்தாகக் கொள்ளவும் வாய்ப்பு உள்ளது. திவ்ய பிரபந்த ஸேவைக்கும் திருவிழாக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவது அவைகளை அறிந்தவர் மன ஆறுதலுக்கே. ஆழ்வார்களின் பாசுரங்களை வழி பாட்டு வேளைகளில் அநுசந்திப்பது மட்டுமின்றி திருமஞ்சனம், பிரணயகாலம் போன்ற திருவிழாக்களில் அவைகளின் கருத்துக்கள் பரவ ஆகம ஒத்துழைப்பும், அரசு ஆதரவும் வரப் பெற்று அமைத்ததற்கு மணவாள மாமுனிகளின் தொண்டு பாராட்டுக்குரியது.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



சென்ற இதழின் தொடர்ச்சி...

மா முனிவரே! சர்வ லோகங்களுக்கும் சம்பந்தமான அனேக அம்சங்களைப் பற்றி எங்களுக்கு எடுத்துக் கூறி விளங்க வைக்கும் திறமையுடையவர் நீங்கள். உங்களிடம் விஷ்ணு கதைகளைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என நாங்கள் ஆவலோடு இருக்கின்றோம். எனவே, கருணை உள்ளத்தோடு எங்களுக்கு அக்கதைகளை விளக்கிக் கூற வேண்டும் என சௌனகாதி முனிவர்கள் பணிவோடு சூத மகரிஷியிடம் கேட்டுக் கொண்டார்கள்.

முனிவர்களே! மஹாவிஷ்ணு தான் விரும்பிய இடங்களில் இருந்து கொண்டு சிரேஷ்டர்களான பரம பக்தர்களுக்கு மட்டும் காட்சி கொடுத்து, சாதாரணமானவர்களுக்கு அருவமாக இருந்து வருகின்றார்என்று சூத மகரிஷி கூறினார்.

தவசீலரே! அஞ்ஜனாத்ரி போலவும், நீலகிரி போலவும் காட்சி தரும் ஸ்வாமி, வைகுண்டம் விட்டு இம்மலையில் நிலை பெற்று நின்றிருப்பதற்கான காரணம் என்ன? சொல்லுங்கள்'' என்று மீண்டும் மீண்டும் சௌனகாதி முனிவர்கள் கேட்டுக் கொண்டனர். அப்பொழுது அத்தவசீலர் "ஒரு சமயம் வியாசர் எனக்குக் கூறிய அக்கதையை உங்களுக்கு கூறுகிறேன் கேளுங்கள் என்று கதையைக் கூறலானார்.

சனகசனந்தாதிகள் வைகுண்ட வாயில் காப்பாளகர்களான ஜெய, விஜயர்களைச் சபித்தார்கள். அந்த சாபத்தின் காரணமாக திதி கர்பத்தில் ஜெய, விஜயர்கள் இரண்யாட்சனாகவும், இரண்யகசிபுவாகவும் பிறந்தார்கள். இரண்யாட்சன் அரக்கக்குணம் கொண்டு சாதுக்களைத் துன்புறுத்தினார்.

ஸ்வாமி வராக உருவம் கொண்டு அவனை அழித்தார். அண்ணன் இரண்யாட்சன் அழிக்கப் பட்டதை அறிந்து, இரண்யகசிபு மிகவும் கோபம் கொண்டு கொதித்து எழுந்தான். அவனுடைய அட்டூழியங்களும் எல்லை மீறிப் போனது. அதனால் ஸ்வாமி ஸ்ரீஹரி நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்ய கசிபுவைக் கொன்று பிரகலாதனைக் காப்பாற்றினார்.

சாபம் பெற்றவர்களான ஜெய விஜயர் இருவரும் இரண்டாவது பிறவியில் கும்பகர்ணனாகவும், இராவணனாகவும் பிறந்தனர் . அவர்கள் உலக மக்களுக்கு துன்பத்தைக் கொடுத்தார்கள். சிரேஷ்டர்களான பக்தர்களையும் துன்புறுத்தத் துணிந்தார்கள். இதை பொறுத்துக் கொள்ள முடியாத அவர்கள் தேவர்களோடு சேர்ந்து தங்கள் துன்பங்களை, துயரங்களை ஸ்வாமி ஸ்ரீஹரியிடம் முறையிட அனைவரும் புறப்பட்டுச்

சென்றனர். பாற்கடலுக்கு வடக்கு முகமாக நின்று வேதபண்டிதர்களோடு ஸ்வாமிக்கு விண்ணப் பித்தார்கள்.

“உலகத்தைக் காப்போனே! இராவணன் எனும் அசுரன் சாதுக்களை துன்புறுத்தி வருகிறான். மக்கள் மிகவும் அவனின் இன்னலுக்குள்ளாகி வருகின்றனர். இராவணன் சம்ஹாரம் நடந்தால்தான் எங்களுக்கும், இந்த உலகத்தினருக்கும் நிம்மதி உண்டாகும் என மிகவும் வருத்தமுடன் கேட்டுக் கொண்டனர். ஆனால் அதற்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று புரியாமல் தவிக்க, அப்பொழுது விஷ்ணோஹம் என்று சொல்லியப்படி விஷ்ணுதூதர் ஒருவர் ஆகாய வீதியில் தோன்றினார்.

“விஷ்ணு பக்தர்களே! நீங்கள் எந்த தெய்வத்தை நினைத்து வேண்டிக் கொண்டிருக்கிறீர்களோ அந்த விஷ்ணு இப்பொழுது பாற்கடலில் இல்லை. பூலோகத்தில் மலை மீது இருக்கிறார். நீங்கள் எல்லோரும் அங்கு சென்று முறையிடுங்கள் என்று கூறி மறைந்தார். விஷ்ணு தூதர் தோன்றியதும், ஆணையிட்டுக் கூறியதையும் நினைத்து தேவர்கள் வியந்து போனார்கள். உடனே அவர்கள் அனைவரும் பூலோகத்திற்குப் புறப்பட்டனர். மலை மேல் உள்ளதாகக் கூறியதை மனதில் கொண்டு மலைகள் தோறும் தேடி அலைந்தனர். கடைசியில், ஸ்வாமி வைகுண்டத்திலேயே இருப்பாரோ என்று ஒருவாறு முடிவு செய்து அங்கு செல்லலாம் என நடந்து செல்லும்போது வழியில் தேவரிஷி நாரதர் தென்பட்டார். தேவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு “ஸ்வாமி” எங்கிருக்கிறார் என்பதை அவரிடம் கேட்டு அறிந்து கொள்ள முயன்றனர்.

நாரதரே! தாங்கள் மூவுலகையும் சுற்றி வரும் வல்லமையுடையவர். தேவாதி தேவர்களின் அனைத்து ஒளிவு மறைவுகளையும் அறிந்து வைத்திருப்பவர். மேலும் நீங்கள் மகாத்மாவும் கூட. நாங்கள் அனைவரும் விஷ்ணு தூதர் சொல்லியதற்கு இணங்க பூலோகம் எல்லாம் சுற்றித் தேடிப் பார்த்தோம். ஸ்வாமியை எங்கும் காணமுடிய வில்லை. ஒருவேளை வைகுண்டத்தில் இருப்பாரோ என எண்ணி அங்கு சென்று கொண்டிருக்கும்போது தான் உங்களுடைய தரிசனம் கிடைத்தது என்றார்கள்.

அதைக் கேட்ட நாரதர், தேவர்களே! நான் ஸ்வாமியைப் பார்ப்பதற்காக வைகுண்டம் சென்றேன். ஆனால் அவரை அங்குக் காணவில்லை. அவர் எங்கு இருக்கிறார் என்பதை பிரம்மதேவரிடமே சென்று அறிந்து கொள்வோம் எனக்கூறி இந்திர னோடு தேவர்கள் எல்லோரும் சத்திய லோகத்திற்குச் சென்றார்கள். சத்தியலோகத்தில் உள்ள நான் முகனைக் கண்டு தரிசித்து இரு கரங்களும் கூப்பி வணங்கினார்கள். அவர்களைப் பார்த்த பிரம்மா, “எங்கே அனைவரும் ஒன்றாக சேர்ந்து வந்துள்ளீர் கள்? முதலில் நீங்கள் அனைவரும் அமருங்கள்” என்று கூற, வந்தவர்கள் அனைவரும் அமர்ந்தனர்.

தேவர்களே! நீங்கள் அனைவரும் நலம்தானே? என நலம் விசாரிக்க, தேவர்கள், “ஸ்வாமி! எல்லாம் நலமே. உங்களைப் போன்றவர்கள் எங்கள் மேல் கொண்டுள்ள கருணையினால் நாங்கள் அனைவரும் நலமே! ஆனால் ஒரு விண்ணப்பம். சர்வ லோகங்களிலும் பிரச்சனை ஒன்றும் இல்லாமல் இருக்க பூலோகத்தில் மட்டும் எத்தனையோ அதிசயங்கள் விபரீத நிகழ்ச்சிகள் துன்பங்கள்...

இராவணனால் அனுப்பி வைக்கப்பட்ட அசுரர்கள், இலங்கையிலிருந்து புறப்பட்டு ஸ்ரீசைலத்திற்கு வந்து எங்களையும், மக்களையும் மிகவும் துன்புறுத்தி வருகின்றனர். மக்களைப் பார்த்தவுடன் அவர்களை அப்படியே விழுங்கி விடுகிறார்கள். மேலும், கொடூரமான செயல்களை யும் செய்து வருகின்றனர். இவை அறிந்தும் இராவணன், ஒன்றும் அறியாதவன் போல் இருந்து வருகிறான். அனைத்துக்கும் காரணம் அவனே. இராவணன் அழிந்தால் ஒழிய பூலோகவாசிகளுக்கும் எங்களுக்கும் நலம் உண்டாகாது ஸ்வாமி! மேலும்...

நாங்கள் தவசிகள், சாந்தகுணமுடையவர்கள், இராவணனுக்குச் சாபம் கொடுக்கக்கூடிய அளவுக்கு தவவலிமை உடையவர்களும் அல்லோம். எனவே, அவனுக்குத் தண்டனை கொடுப்பதற்கு ஸ்ரீயபதி ஒருவரே தகுதியுடையவர்.

அந்த ஸ்வாமியைத் தரிசிப்பதற்காகப் பல இடங்களில் தேடி அலைந்ததைத் தவிர பயன் ஒன்றுமில்லை. அதனால், தாங்களாவது ஸ்வாமி இருக்கும் இடத்தைச் சொல்வீர்கள் என்ற நம்பிக்கையில் இங்கு வந்தோம். அவர் இருக்கும் இடம் தங்களுக்கு மட்டும்தான் தெரியும். ஸ்வாமி எங்குள்ளார் என்பதை தயவு செய்து கூறுங்கள். இராவணனை அழித்து எங்களை அவனிடமிருந்து

காக்கும் சக்தி யுக்திகள் அறிந்தவர் ஸ்வாமி ஒருவரே எனக் கேட்டுக் கொண்டனர். முனிவர்களே! ஸ்ரீஹரி வேங்கடாத்ரி மலையில் உள்ளார். அவர் ஒருவரே சரணடைந்தவர்களைக் காக்கக் கூடியவர். அவரே இராவணனை அழிக்கக் கூடியவர். இது நிச்சயம் நடக்கும். நானும் உங்களுடன் வேங்கடாத்ரிக்கு வருகிறேன். நாம் இப்பொழுது செய்ய வேண்டியதைக் கூறுகிறேன் கேளுங்கள்.

ஸ்வாமி தரிசனம் அவ்வளவு எளிதல்ல. அவர் ஒரு மாயாவி. ஸ்ரீதேவியோடு அடர்ந்த காடுகளிலும், குகைகளிலும் சுற்றித் திரிபவர். ஆனாலும், பின்னர் நடக்கவிருக்கும் கதையை உங்களுக்கு நான் சொல்லப் போகிறேன் என்றார். உடனே தேவர்கள் எல்லோரும் அவர் சொல்வதைக் கேட்பதற்குத் தங்களது காதுகளை ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள்.

முனிவர்களே! உங்களுக்கு சிறப்பு செய்தி ஒன்று கூறுகிறேன் என்றார். அது என்னவென்றால் தசரதன் குழந்தை பாக்கியம் வேண்டி ஸ்வாமி புஷ்கரணியின் கரையில் தவம் செய்யப் போகிறார். அப்பொழுது ஸ்ரீஹரி தவறாமல் அங்கு வந்து தோன்றி தரிசனம் தருவார். எனவே அதுவரையில் நாம் எல்லோரும் இம்மலையிலேயே இருந்து அந்த நல்ல சமயத்திற்காகக் காத்திருப்போம். ஸ்ரீஹரி தசரதனுக்கு காட்சி கொடுக்கும் வேளையில் நாமும் ஸ்வாமியிடம் வேண்டிக் கொள்வோம் என்றார்.

### தசரதன் வேங்கடாத்ரிக்கு வருதல்

அயோத்தி அரசனான தசரதன் தனக்கு எல்லா செல்வங்கள் இருந்தும் குழந்தைச் செல்வம் இல்லாததை நினைத்து வருத்தப்பட்டு தன் கவலையைத் தன் குலகுருவான வசிஷ்டரிடம் எடுத்துக் கூறினார். அப்பொழுது குலகுரு...

அரசே! உன் கவலை எனக்குப் புரிகிறது. நீ புண்ணியவான். இருந்தாலும், ஏதோ தீய சக்திகளின் செயலால் உமக்குப் பிள்ளைப்பேறு உண்டாகவில்லை. இதற்கு ஒரே வழி வேங்கடாத்ரியில் உள்ள புஷ்கரணியின் கரையோரத்தில் அமர்ந்து தவம் செய்வது மட்டுமே. நிச்சயமாக ஒன்று சொல்லிக் கொள்கிறேன். உம் வம்சத்தைக் கட்டிக் காக்க பிள்ளைகள் பிறப்பார்கள் என்றார். எனவே தாமதிக்காமல் புறப்படுங்கள் என்று உற்சாகப்படுத்தினார். தசரதன் மிகவும் மகிழ்ந்து குருவே! நிச்சயிக்கப்பட்ட இந்தப் பயணத்திற்குரிய நல்ல நேரத்தையும் தாங்கள் நிர்ணயித்துக் கூறுங்கள் எனக் கேட்டுக் கொண்டான். குருவும் சரி என்றார்.





## ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரம்

திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் “ஸப்த கோ” பிரதக்ஷிணை மந்திரம் அமைந்துள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே. “கோயிலுக்கு ஓர் கோமாதா” திட்டம் அதற்கு ஓர் சான்றாகும்.

ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், “கோ” பூஜை, “கோ” தரிசனம் குறிப்பாக ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.

இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும்.

பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப் பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஸப்த கோசாலையில் கோவிந்தனைத் தரிசித்து, கோ பிரதக்ஷிணம் செய்த பின்னர் மலை ஏறத்தொடங்கலாம்.

மஹாராஜா! இன்றைய நாளும் மிகவும் நன்றாக உள்ளது. எனவே தாங்கள் பயணத்தை இன்றே தொடங்குங்கள். தாங்கள் பயணிக்க வேண்டிய வழியையும் சொல்கிறேன் கேட்பீராக என்றார்.

கங்காநதிக்குத் தெற்கில் ஸ்வர்ணமுகி நதி. அந்த நதிக்கு வடக்குப் புறத்தில் சிறிது தொலைவில், கங்கைக்கு தெற்குப் பாகத்தில் இருநூறு யோசனை தூரத்தில் வேங்கடகிரி. அந்த மலையில் கங்கா நதி முதலான நதிகளைக் காட்டிலும் புண்ணியத்தைத் தரக்கூடிய தீர்த்தங்கள் உள்ளன. அவைகளுள் மிகவும் சிறப்புப் பெற்றது ஸ்வாமி புஷ்கரணி தீர்த்தம் ஆகும்.

அங்கு மேரு மலையைக் காட்டிலும் உயர்ந்த வேங்கடாத்ரி மலை உள்ளது. அம்மலை இயற்கை எழில் சூழ்ந்தும், காண்போர் மனதைக் கவரும் வண்ணம் அமைந்தும் உள்ளது. மேலும், அம் மலையின் சிறப்புகளை எல்லாம் குலகுரு எடுத்துக் கூறிக் கொண்டு வர தசரதன் குலகுருவோடு கங்கா நதி வந்து அடைந்தான்.

கங்காநதியில் நீராடி, தவம் செய்தும், ஜெபம் செய்தும், தானம் முதலியவைகள் செய்தபிறகு, அங்கிருந்து புறப்பட்டு கோதாவரி, கிருஷ்ணவேணி, மலாபஹாரி, துங்கபத்ரா நதிகளிலும் நீராடிய பின்பு, வேங்கடாத்ரி வந்து சேர்ந்தார். ஸ்வாமி புஷ்கரணியின் கரையில் தவம் செய்து கொண்டிருந்த முனிவர்களை வணங்கி, அனைவரையும் தரிசனம் செய்து கொண்டான்.

ஸ்வாமி புஷ்கரணி கரையோரத்தில் நான்முகனே தியானத்தில் மூழ்கியிருந்தார். அத்துடன் எட்டெழுத்து மந்திரத்தை ஜெபிப்பதைக் கண்ட வசிஷ்டர் தசரதனிடம் இவ்வாறு கூறினார்.

“அரசே! நாம் வந்து சேர வேண்டிய இடத்திற்கு வந்து விட்டோம். நான்முகனாகிய பிரம்ம தேவரே இங்கு தவம் செய்யத் தலைப்பட்டார் என்றால் நிச்சயமாக அவருக்கு ஸ்வாமி காட்சி கொடுப்பது என்பது நிச்சயம். இது சாத்தியம். எனவே, தசரதா! நீ இங்கேயே தியானித்திருப்பாயாக” என்றார்.

குருவே! தாங்கள் உண்மையைக் கூறினீர்கள். ஹரி மகிழும்படியான ஜெபமுறையை எனக்குக் கூறுங்கள் என்று இருகரம் கூப்பி நின்றார் அயோத்தியரசன்.




குருவான வசிஷ்டர் தசரதனுக்கு ஸ்ரீமந்நாராயண மந்திரமான அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்தார். தசரதர் மனதினை ஒருநிலைப்படுத்தி ஜெபம் செய்யத் துவங்கினார்.

அப்போது அங்கே பெரிய ஒலி கேட்டது. அந்த ஒலியைக்கேட்டவுடன் பிரம்மா முதலியோர்கள் தியானம் கலைந்து கண்கள் திறந்து பார்த்தனர். தசரதன் அவர்களைப் பார்த்து தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

தசரதனைப் பார்த்து அவர்கள் “தசரதா! உன் வம்சம் விருத்தி அடையும்” என்றனர். அந்தப் பெரிய ஒலி என்னவென்று எல்லோரும் திகைத்தனர். சிறிது நேரத்தில் ஒரு பேரொளி உண்டானது. அதைக் காண முடியாமல் கண்களை மூடிக் கொண்டார்கள்.

பிரம்ம தேவருக்கு ஐந்து வண்ணங்களில் ஒளிரும் ஒரு நாகம் தென்பட்டது. அதைக்கண்டவுடன் முனிவர்களே! என் தந்தை வாசம் செய்யுமிடம் தெரிந்து விட்டது. வாருங்கள் வாருங்கள் என்று! மகிழ்ச்சிப் பொங்க அழைத்தார். அங்கு பத்ம பீடத்தில் ஹரியும் அவரோடு ஸ்ரீதேவி நீளா தேவியும் காட்சி கொடுப்பதைக் கண்டதும் தாம் பிறந்த பலனை அடைந்து விட்டோம் என்று கூறி ஸ்ரீமந் நாராயணனை மனமார வணங்கி நின்றனர்.

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...







# 108 திவ்ய தேச வைபவம் - 85

# திருக்கார்வானம்

## பெரிய காஞ்சி

*– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*

**புராண வரலாறு :**

கார்மேகம் எல்லா இடங்களிலும் மழை பொழிவதைப் போல, பகவானும் அருளை, மழைபோல வழங்குகிறான். எம்பெருமானின் மூன்றாவது திருவடியைத் தனது தலையில் தாங்கிய பலிச்சக்கரவர்த்தி, திருவிக்கிரம அவதார வடிவை தான் முழுவதுமாகச் சேவித்து மகிழ வேண்டும் என விரும்ப, “ஸத்யவிரத க்ஷேத்திரமான காஞ்சியில் அசுவ மேத யாகத்தை ஒரு முறை செய்தாலேயே, ஆயிரம் முறை செய்ததற்கு ஒப்பாகும்” என்று கூறவும், அதனை நடத்தி வைக்கும் பொறுப்பையும் மகாபலி பகவானிடமே ஒப்படைத்தான். பகவானால் பாதாள உலகில் இருந்த மகாபலி மண்ணுலகில் காஞ்சிக்குக் கொண்டு வரப்படுகிறான்.

மகாபலி, எம்பெருமானின் அருளால் யாகம் செய்வதைக் கண்டு பொறுக்காத தேவர்கள், “சோஷண அஸ்திரம்” என்ற ஒன்றைப் பயன் படுத்தி யாகம் நடக்கும் இடத்தில் தண்ணீர் இல்லாமல் வற்றச் செய்ய, மகாபலி செய்வதறியாது, பகவானை வேண்ட, எம்பெருமான், மகாபலியிடம் கீழ்க்கடலில் இருந்து ஒரு பெரிய மேகக் கூட்டம் நீர் நிறைந்த நிலையில் காஞ்சி நோக்கி வருவதைக் காட்டினான்.

காளமேகம் – காஞ்சி நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டான் மகாபலி. மேகங்களை நோக்கிச் சேவித்தான். அம்மேகத்தின் இடையில் சங்கு சக்ரங்களையும், அலர்மேல் மங்கையாகிய பெரியபிராட்டியார் விளங்குவதையும் கண்டு எம்பெருமானே மேக வடிவில் வந்திருப்பதை அறிந்து, எல்லை இல்லா மகிழ்ச்சியை அடைந்தான்.

கார்மேகங்கள், காஞ்சி மாநகரமே பெரு வெள்ளத்தால் நிறைந்து குளிருமாறு செய்து விட்டது. மஹாபலி இதே நிலையில், அர்ச்சாவதாரத்தில் விளங்கி, பின்னானார் வணங்கும் சோதியாய்த் திகழ வேண்டும் என்று வேண்டவே, அன்று முதல் இத்திவ்ய தேசத்தில் பகவான் அருள்பாலிக்கத் தொடங்கினான்.

**சிறப்புகள் :**

இத்திவ்யதேசம் “கார்வானத்து உள்ளாய்!” என்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளது. இப்பாசுரத் தொடரை விளக்கிய ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை, “மழை பொழிய இருக்கும் மேகக்கூட்டம் போலே திருக்கார்வானத்திலே வர்த்திக்கிறவனே (வாழ்கின்றவனே)” என்று கூறி, இத்திவ்ய தேச எம்பெருமானின் இயல்பை மேலும் வருணிக்கிறார். “திருக்கார்வானம்” என்ற திருப்பெயர். இவ்வூருக்கு அமைந்ததன் காரணம். இந்த தலத்து எம்பெருமானின் பண்பின் அடிப்படையில்தான் என்கிறார் அவர். மேகம் எந்தப் பயனையும் எதிர்பாராமலும், நீர்பகுதி, நிலப்பகுதி என்ற பாகுபாடு காட்டாமலும் மழைபொழிவதைப் போலே, திருக்கோவலூர் ஆயனின் அருட் கொடையை. திருக்கார்வானத்து பகவானின் அருட் குணம் நினைவு படுத்துவதாக உள்ளது என்கிறார். ஸ்ரீஉபவே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காராசாரியர் “ஸ்வாபதேசார்த்த ஸாகரம்” என்ற தமது அரிய நூலில் “முகில் வண்ணன் விசேஷார்த்தம்” என்றும்

“மேகவிசேஷார்த்தம்” என்றும் இரண்டு தலைப்புகளில் கூறுகிறார்.

அவைகளில் சில:

1) மின்னல், இடி உள்ள மேகத்தில் நீர் நிரம்பி இருப்பதுபோல், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடம் கருணை உணர்வு மிகுந்திருக்கும்.

2) நீரை முகந்து கொள்ளும் கடலிலும் மேகம் மழை பெய்யும். அது போன்று, அவதாரங்களில், தனக்கு ஞானம் அளித்த ஆசாரியர்களுக்கும் எம்பெருமான் உபதேசம் செய்வான்.

3) மேகம் இன்ன காலத்தில் மழைபொழியும் என்று வரையரை செய்ய முடியாது. அது போன்று எம்பெருமான் எப்போது அருளுவான் என்று யாராலும் கூற முடியாது.

4) மேகம் சில நேரங்களில் வெறும் முழக்கத்துடன் பெய்யாமல் சென்று விடும். சில நேரங்களில் அதிக முழக்கம் இல்லாமல் நீரைப் பொழியும். அது போன்று எம்பெருமான் சிலருக்கு வெளிக்காட்டாமல் உதவி செய்வான்.

5) மேகமானது சிலருக்கு தீங்கைக் கொடுக்கும். எம்பெருமானின் அவதாரமும் சிலரை அழிப்பதற்காகவே உண்டாகும்.

இப்படியாக இத்திவ்ய தேச எம்பெருமானின் அருளும் பண்பினால் இவ்வூருக்குத் திருக்கார் வானம் என்ற பெயர் உண்டாயிற்று.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | கள்வர், நவநீதசோரன், வெண்ணெய் உண்ட கள்வன் (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்). |
| தாயார் | : | கமலவல்லித் தாயார். தாமரையாள். |
| தீர்த்தம் | : | கௌரி தடாகம், தராதர தீர்த்தம். |
| விமானம் | : | புஷ்கல விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | கௌரி மஹாபலி, அசுவத் தாமா, கார்க்கிய முனிவர். |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |

**த்யானச்லோகம் :**

*“மேகா காச புரே தராதர ஸரஸ்தீரேச*
*சோராஹ்ய வய:*
*புண்யே புஷ்கல நாம்நி மத்ய வலஸத்*
*ஸ்ரீமத்விமாநோத்தமே ।*
*விஷ்ணுச் சோத்தர திங்முகஸ் ஸரஸிஜா*
*ஸக்தஸ் ஸமஸ்தாச்ரய:*
*சித்தேமே ஸததம் கரோது வஸதிம் கௌரீ*
*ப்ரஸன்ன: ப்ரபு ॥”*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்



## திருமலையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை



**புண்ணிய திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி செய்ய வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்தர தடை விதித்துள்ளது.**

**எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப்பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழங்கும் ஜலப்பிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுப்புறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடமையாகும்.**

பாசுரம்

*"...கார்வானத்து உள்ளாய்!கள்வா!*
*காமரு பூங் காவிரியின் தென்பால் மன்னு*
*பேரகத்தாய்! பேராது என் நெஞ்சில் உள்ளாய்!*
*பெருமான் உன் திருவடியே பேணினேனே!"*

– திருமங்கையாழ்வார்

*"தாலேலோ என்று ஆய்ச்சி தாலாட்டித்தான்*
*முலைப்பா லாலே எவ்வாறு பசி ஆற்றினள்*
*முன்? மாலே! பூங்*
*கார்வானத்துள்ளாய், கடலோடும் வெற்போடும்*
*பார் வானம் உண்டாய் நீ பண்டு"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

801. ஓம் அர்ச: நம:

மஹாத்மா எனத் துதிக்கப்பட்டவன்.

ஓம் புஷ்கரிணீ: நம:

புஷ்டியையே உண்டாக்குபவள்.

802. ஓம் வாஜஸநி: நம:

அன்னத்தில் ருசியை உண்டாக்கியவன் .

ஓம் புண்யா: நம:

பயத்தைப் போக்குபவள்.

803. ஓம் ஸ்ருங்கீ நம:

மயில் தோகையைக் கையில் தரித்தவன்.

ஓம் கண்யா: நம:

பூஜிக்கத்தக்கவள்.

804. ஓம் ஜயந்த: நம:

பௌத்த அவதாரம் செய்தவன்.

ஓம் தாரித்யபஞ்ஜதீ: நம:

ஏழ்மையைப் போக்குபவள்.

805. ஓம் ஸர்வவிஜ்ஜயி: நம:

எல்லாம் அறிந்தவர்களையும் வெல்பவன்.

ஓம் தன்யா: நம:

பாக்யம் அளிப்பவள்.

806. ஓம் ஸுவர்ணபிந்து: நம:

உறுதியான பேச்சை உடையவன்.

ஓம் மாந்யா: நம:

கௌரவத்தை அளிப்பவள்

807. ஓம் அக்ஷோப்ய: நம:

எவராலும் கலங்க வைக்க இயலாதவன்.

ஓம் பத்ம நேமி: நம:

அடைய வேண்டிய பகவானிடம் அனைவரும் பயமின்றிச் செல்ல உதவுபவள்.

808. ஓம் ஸர்வவாகீஸ்வரேஸ்வர: நம:

எல்லா பேச்சாற்றல்களையும் அருள்பவன்.

ஓம் பார்க்கவீ: நம:

ப்ருகு மஹரிஷியின் புத்ரீ.

809. ஓம் மஹாஹ்ரத: நம:

பெரிய தடாகம் போன்றவன்.

ஓம் வம்சவர்த்தநீ: நம:

வம்ச வ்ருத்தியை அளிப்பவள்.

810. ஓம் மஹா கர்த்த: நம:

நாஸ்திகவாதிகளை நரகத்தில் தள்ளுபவன்.

ஓம் தீக்ஷ்ணாப்ரவ்ருத்தி: நம:

கடுமையான கார்யங்களில் ஈடுபடாதவள்.

*ஸ்ரீமதே கோமளவல்லீ /கமலவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீநவநீதசோர (கார்வானர்) பர ப்ரம்மணே நம:*

### குறிப்பு :

பெரிய காஞ்சிபுரத்தில் உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளே இந்தத் திவ்ய தேசம் அமைந்து உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*

## 2024, ஜூலை மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 7 | பூரி ஜெகந்நாத ஸ்வாமி ரதயாத்திரை. |
| 10–12 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவ மஹோத்ஸவம். |
| 15 | பெரியாழ்வார் திருநட்சத்திரம். |
| 16 | திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம் |
| 16–18 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம். |
| 17–20 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 21 | ஆஷாட பௌர்ணமி, வியாச ஜெயந்தி, குருபௌர்ணமி. |
| 21 | ஆளவந்தார் திருநட்சத்திரம். |
| 29 | ஆடிக்கிருத்திகை. |

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## பஞ்சகவ்யத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

**ஊர்வி நாசல் ட்ராப்ஸ்**
சளி, தலைவலி தடுக்க, கண், காது & மூக்கின் செயல்பாடுகளை மேம்படுத்த...

**பூமி ஹெர்பல் ப்ளோர் க்ளீனர்**
தரையைச் சுத்தப்படுத்தவும், கிருமிகளை அழிக்கவும் மற்றும் இயற்கை நறுமணத்திற்கும்...

**நந்தினி கோ அர்க்**
நீண்ட நாள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிவகுக்கும்.

**க்ஷமா கௌ டங்க் கேக்ஸ்**
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன்படுத்தப் படுகிறது.

**பூவட்டி கௌ டங்க் லாக்ஸ்**
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன் படுத்துவதால் காற்றுத் தூய்மையாகும்.

**அவனி தூப் சூர்ணம்**
நறுமணமாக வரும் வாசனை நம்மை காக்கும்.

**தரணி அகர்பத்தி**
பூமித்தாய் போன்று நன்மை நிறைந்தது.

**தாத்ரி சாம்பராணி கப்ஸ்**
நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

**வைஷ்ணவி தூப் ஸ்டிக்ஸ்**
காற்றைத் தூய்மைப்படுத்தும்.

**வாராஹி தூப் கோன்ஸ்**
தூபப்புகையானது சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்தும்

**பிருத்வி விபூதி**
ஐச்வர்யத்தைப் பெருக்கும்.

**தன்ஷிகா ஹெர்பல் டூத் பவுடர்**
பற்கள் மற்றும் ஈறுகளை காக்கும்.

**ஹிரண்மை ஹெர்பல் ஃபேஸ் பேக்**
அழகையும் நிறத்தையும் காக்கும்.

**மஹி ஹெர்பல் சோப்**
தோலை பாதுகாக்கும்.

**கஸ்யபி ஹெர்பல் ஷாம்பு**
தலைமுடியைப் பாதுகாக்கும்.


மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்கள்
0877-2277777, 2233333



சென்ற இதழின் தொடர்ச்சி...

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமானுசர்



– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

(ஏராரும் செய்ய வடிவு எப்பொழுதும் வாழி) திருக்கச்சி நம்பிகள் மூலமாக இளையாழ்வாரான இராமாநுசரைக் காண ஆளவந்தார் காஞ்சி வந்த போது யாதவப்ரகாசன் திரளாகப் பேரருளாளரை வலம் வந்து கொண்டிருந்தார். அப்போது "அந்த திரளில் சிவந்து நெடுகி வலியராய், திருவடிகள் நக ஒளியோடுகூட முழந்தாள் தசைந்து, பழுத்த பரியட்டமும் சாத்திக் கொண்டு, வயிறு நிறைந்தவராய், அகன்ற திருமார்பும், தசைத்திருந்த திருக்கழுத்தும், சிவந்த திருவதரமும், சந்த்ர மண்டலம் போலே இருக்கிற திருமுகத்தின் ஒளியும், சந்திர கிரணம் போலே திருமுகத்தின் ஒளியும், திருமுடிச்சீலையும், செவி மறையச் சாத்திக் கொண்டு, நீண்டவையாய், உருண்டிருப்பவையாய், இரும்பு உலக்கைபோல விளங்குபவையுமான ஆபரணங்களையும் அலங்கரிக்கப்பட்ட திருக்கைகள் என்கிறபடியே ஆஜாநுபாஹுவாய் நடுவே வருபவர்" என்று காட்டிக் கொடுத்த வடிவு எப்போதும் வாழ வேண்டும் என்று ஆளவந்தார் வாழ்த்தினது இங்கு நினைதற் பாலதாகும்.

மேலும் "காஷாயசோபி... மமாக்ரே" என்று ப்ரார்த்தநா பஞ்சகத்தில் கூறியபடியே யதிஸார்வபௌமரான எம்பெருமானார் திருமேனி அழகைச் சொல்லும் போது காஷாயத்தினால் பிரகாசிப்பதும், அழகிய குடுமியின் அமைப்பை உடையதும், திரிதண்டத்தால் ஒளிபெற்ற திருக்கையை உடையதும், வெளுத்த பூணூலை உடையதும், ஒளி விடுகின்ற திருமண்காப்பை உடையதுமாய், உதிக்கும் சூரியனோடு ஒத்துள்ளதான திருமேனி என்பர். எம்பார் என்னும் ஆசார்யரும் இராமாநுசர் வடிவழகைக் கண்டு, *''பற்பமெனத் திகழ்...இல்லை எனக்கெதிரே''* என்று அநுபவித்தது நினைதற்பாலதாகும். மேலும் அடியார்களுக்குத் தஞ்சமானதாய், ஸௌந்தர்யம் முதலானவற்றாலே மிகுந்து புஷ்பஹாஸ ஸுகுமாரமாய், பரமாத்ம ராகம் புறம்பொசிந்தாப் போலே சிவந்திருப்பதான திவ்ய மங்கள திருமேனியும், எல்லாக் காலத்திலும் நித்யமங்களமாய்ச் செல்ல வேணும்.

(இலங்கிய முந்நூல் வாழி) இராமாநுசர் அணிந்த முப்புரிநூலின் அழகை எம்பார் *''முப்புரிநூலொடு முன்கையிலேந்திய முக்கோல் தன்னழகு''* என்றும், வடுகநம்பி தாம் அருளிய ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்ரத்தில் *''பவித்ரீக்ருத கூரேச''* என்கிறபடியே கூரத்தாழ்வானை இராமாநுசர் தமது பவித்ரம்

எனப்படும் முப்புரிநூலாகவும் அபிமானித்திருந்தார். வேதாந்த தேசிகர் யதிராஜ சப்ததியில் தெய்வீக யஜ்ஞோபவீதம் முதலானவற்றோடு இருந்த இருப்பைக் கொண்டாடுகிறார்.

முதலியாண்டான் அருளிய தாடீ பஞ்சகத்தில் *''த்ரய்யா மாங்கல்யஸூத்ரம்.... ப்ரஹ்ம ஸூத்ரம்''* என்கிற நான்காவது சுலோகத்தில் இராமாநுசருடைய திருமார்பில் திகழும் முப்புரிநூல் எட்டு விதமான மகிமையுடையது என்பர்– அவையாவன –

வேதமாதாவுக்கு மங்கள சூத்ரம் போன்றது. எம்பெருமானுடைய அடி இணையைச் சென்று கிட்ட பற்றுக்கோடான ஸூத்ரம் போன்றது; உபநிடதமான விளக்கு எரிவதற்கு திரிநூல் போன்றது. கல்யாண குணங்களோடு கூடிய ஸகுண எம்பெருமானிடம் கொண்டு செல்லும் ஹாரமான ஸூத்ரம் போன்றது; யோகிகளின் உள்ளமாகிற தாமரை ஓடைக்கு நாள ஸூத்ரம் போன்றது; முனிவர்களுக்குக் காப்பான ஸூத்ரம் போன்றது; ப்ரஹ்மஸூத்ரமான முப்புரிநூலானது வெற்றியைத் தருவதாகும்.

இத்தகைய முப்புரிநூல் வைதிகோத்தமர் என்பதை அறியும் வகையில் நிறம் பெறுத்ததுமாய், ஸந்த்யா காலத்தில் அழகான மேகத்தில் மின் கொடி படர்ந்தாப் போலே திருமார்பிலே பிரகாசிப்பதாய், ப்ரஹ்மஸூத்ர புகரோடே நித்யமாய் இருக்க வேணும். ப்ரார்த்தனா பஞ்சகத்தில் விமல உபவீதம் என்று வெளுத்த பூணூலை அணிந்தவர் என்றதும் காண்க.

(இணைத்தோள்கள் வாழி) இராமாநுசருடைய திருத்தோள்களானவை பொற்கற்பகத்தின் கிளைகளாய், அதற்கு மேலே மோக்ஷத்தைக் கொடுப்பதில் ஸங்கல்பித்தவையாய், பிறவிக்கடலில் மூழ்கித் துன்பப்படுபவர்களை எடுத்து நிறுத்துகிற சக்தியை உடையதாய், இப்படிக் கொடுக்கவும் எடுக்கவும்படியான குணத்தாலே பணைத்து நெடிதாயிருப்பனவாய், அதுக்கு மேலே மகிழம், துளசி, தாமரை ஆகிய மாலைகளாலே அலங்கரிக்கப்பட்டதாய் இருக்கும். அத்தகைய தோள்கள் நித்ய மங்களமாக இருக்க வேண்டும்.

(சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி) *''முகச்சோதி மலர்ந்ததுவோ''* (திருவா.3–1–1) என்று சொல்லுகிறபடியே அநுபவிக்கத்தக்கதாய், எம்பெருமானை மனக்கண்ணாலே காண்பதனாலும், அடியார்களைக் காண்பதில் சந்தோஷத்தாலும் அடியார் அல்லாதாரை அழிப்பதில் வருத்தம் இன்மையாலும் எண்ணிக்கையற்றதாய், நிர்மலமாய், அழகை உண்டுபண்ணுகிறதாய், இருக்கிற முக ஒளியானது நித்ய மங்களமாகச் செல்ல வேணும்.

## ஸப்தகிரி ஏப்ரல் 2024 விடைகள்

1. நம்மாழ்வார்.
2. ஸ்ரீராமபிரான்.
3. அகலிகை.
4. ஊர்மிளா.
5. விபீஷ்ணன்.
6. சித்திரகுப்தன்.
7. புத்திரகாமேஷ்டி யாகம்.
8. குலசேகர ஆழ்வார்.
9. கூடல்மாணிக்கம்.
10. கணிகண்ணன்.
11. சப்தவேதி.
12. வேதசார விமானம்.
13. பத்மாவதி தாயார்.
14. திருமூழிக்களம்.
15. சத்தீஸ்கர்.



## போட்டி எண். 21




**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஆ.ஜீவா, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2. செல்வன் ஜி.பிரணவ் கிருஷ்ணன் பட்டணம் அஞ்சல், ராசிபுரம்.
3. செல்வன் வி.உதயகுமார் குன்றத்தூர், சென்னை.

(தூ முறுவல் வாழி) "புன்னகை பூத்து விளங்கும் அழகான தாமரை போன்ற திருமுகம்" என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (5–17–20) கூறியபடியே ஒரு முகமாய்ச் சேர்ந்து அந்த முக பத்மத்தினுடைய விகாஸம் என்னும் படியாய், *"நின் பன்னிலா முத்தம் தவழ கதிர் முறுவல் செய்து"* (திருவா.9–2–5) என்கிறபடியே அடியார்களைக் காப்பதால் உண்டான ஆனந்தத்தாலும், எம்பெருமானை அனுபவிப்பதனால் சந்தோஷ மிகுதியால் உண்டான ஆனந்தத்தாலும் மலர் மலர்ந்தாப்போலே ப்ரீதியைப் பிரகாசிப்பிக்கிற தூய்மையான சிறுநகையும் நித்ய மங்களமாய்ச் செல்ல வேணும்.

(துணைமலர்க்கண்கள் வாழி) ஸ்ரீரங்கஸ்ரீயையும், தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையும் எப்போதும் கண்டு களிக்குமதாய், கருணை என்னும் நற்குணப் பெருக்காய் அடியார்களை மாசற்றவைகளாக விழிக்கும் என்னும்படி கடாக்ஷிக்கிற இரண்டு தாமரை போன்ற மிகவும் அழகான திருக்கண்கள் அழகு மாறாமல் நித்ய மங்களமாய்ச் செல்ல வேணும்.

(ஈராறு திருநாமமணிந்த எழில் வாழி) கீழ்ச்சொன்ன எல்லாவற்றையும் நிறம் பெறச் செய்வதாய், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை வளரச் செய்யுமதாய், பொன்மலையின் பக்கமெங்கும் வெண் தாமரை பரப்புமாறுப் பூத்தாப்போலே சிவந்த திருமேனியில் வெள்ளியதான பன்னிரு திருநாமத்தால் உண்டான ஸௌந்தர்யம் நித்யமாய்ச் செல்ல வேணும். ப்ரார்த்தனா பஞ்சகத்தில் *"உல்லஸத் ஊர்த்தவபுண்ட்ரம்"* என்று ஒளிவிடுகிற திருமண் காப்பு என்றது காண்க.

(இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழியவே) கீழ்ச் சொல்லப்பட்டதான எல்லா வற்றுக்கும் ஆதாரமாக இருந்து அந்த ஆதார சக்தியாலே குத்ருஷ்டிகளாகிற குறும்பு அறும்படியாயும், அடியார்களைக் காப்பாற்ற உறுப்பாயும், கேஸவ பகவத் இச்சையாலே *"வையம் மன்னி வீற்றிருந்து"* (திருவா.4–3–11) என்னும்படி வேறுபாடு தோற்ற அன்னங்கள் கூட்டம் நடுவில் ராஜ ஹம்ஸமானது இனிமையாக இருக்குமாபோலே பரமஹம்ஸரான தாமும் இராமாநுசருக்கு அதீனராய், இராமாநுசரைத் தொழும் பெரியோராய் இருக்கிற சீடர்கள் எல்லோரும் ஸேவித்து இருக்கிறார்கள். இவர்கள் நடுவே பத்மாஸனத்தில் எப்போதும் எழுந்தருளி இருக்கிற இருப்போடு உபய வேதார்த்தத்தை ஒளிவிடும்படி செய்கிற பரதத்வ போதந முத்திரையானது எப்பொழுதேனும் ஒரு சமயம் இருப்பதன்றிக்கே. எப்போதும் காணத் தகுதியாம்படி வாழக்கடவதாக இருக்கவேணும்.

இராமாநுஜ வாழித்திருநாம உரை தொடரும்....



**திருப்பதி**
**ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி**
**புஷ்பயாக மஹோத்ஸவம்**

**ஒவ்வொரு ஆண்டும்**
**ஆஷாட மாதம் உத்திர நட்சத்திரத்தில்**
**புஷ்பயாகம் நடைபெறும்.**
**பல விதமான வண்ண மலர்களால்**
**பாதம் முதல் கேசம் வரை மலர்கள்**
**தூவி செய்யும் யாகமே இந்த புஷ்ப**
**யாகம்.**
**இந்த புஷ்பயாகம்**
**இவ்வருடம் 14–06–2024**
**வெள்ளிக்கிழமை**
**அன்று**
**நடைபெறும்.**



ஏகாதசி என்பது மாதத்தில் பாதியாகிய பட்சத்தில் பதினோராவது நாள் வருகிறது. ஆகவே, அதை மாதம் இருமுறை நாம் கடைபிடிக்க வேண்டும். பாண்டுரங்க பக்தர்கள் அன்று உபவாசம் இருப்பார்கள். பகவானைப் பற்றிய சிந்தனையுடன் இருப்பார்கள். இரவு தூங்காமல் பகவானின் திருநாமத்தைச் சொல்லி பஜனை செய்வார்கள். இது ஜாகர்ணா எனப்படும். ஆக இது பகவானைப் பற்றி நினைத்து, பிரார்த்தனை செய்து, அதில் நாம் ஒன்றிப் போகும் புண்ணிய தினம் ஆகும். இதில் குழந்தைகள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் எல்லோருமே ஈடுபடலாம்.

பண்டரிபுரத்தில் இரண்டு ஏகாதசிகள் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றன. ஒன்று ஜூலை மாதம் மூன்றாவது வாரம் வருகிறது. இதற்கு ஆஷாட– சுத்த ஏகாதசி என்று பெயர். மற்றொன்று நவம்பர் மாதம் மூன்றாவது வாரம் வருகிறது. இதற்கு கார்த்திகா – சுத்த ஏகாதசி என்று பெயர். பாகவத புராணத்தின்படி திருமால் பாற்கடலில் ஆஷாடத்தில் பள்ளி கொண்டு கார்த்திகையில் துயில் நீங்கி எழுந்திருக்கிறார். இந்நான்கு மாதங்கள் கொண்ட பருவத்துக்கு சாதுர்மாசம் என்று பெயர். இது பெரும்பாலும் மழைப்பருவமாகவும் இருக்கும். இந்தப் பருவத்தில் மகான்களும் சந்தியாசிகளும் இடம் விட்டு இடம் செல்ல மாட்டார்கள். ஒரே இடத்தில் தங்கி இருந்து, தியானத்திலும் பூஜையிலும் வேதாந்த விசாரத்திலும் ஈடுபடுவார்கள். மற்ற எட்டு மாதங்களில் தான் நாடு முழுவதும் தீர்த்த யாத்திரைச் சென்று, புனிதப் பிரசாரம் செய்வார்கள்.

# ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்...



பதினோராம் நாள் வரும் ஏகாதசி நமது பதினோரு புலன்களை இறை உணர்வுடன் சுருதி சேர்த்து விடுகிறது. செயலில் ஈடுபடும் ஐந்து உறுப்புகளும், உணர்வில் ஈடுபடும் ஐந்து புலன்களும், சிந்திக்கும் மனமும் ஆகிய இந்தப் பதினோரு புலன்களுடன் இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஊறிக் கிடக்கும் புண்ணிய நாள் ஏகாதசி. அன்று உணவு மறந்து, துயில் மறந்து, உலகியலானக் காரியங்களைத் துறந்து இறைவனை நாடுகிறோம். அன்று பட்டினி இருக்கும்போதும் பகவானுக்காகப் பட்டினி இருக்கிறோம் என்ற புனித உணர்வைப் பெறுகிறோம். வயிற்றில் உணவு இல்லாத நிலையில் சிந்தைப்பளு நீங்கி இறைவனிடம் ஈடுபடுகிறது.

இவ்வாறு புண்ணியம் பெறுவதன்றி, உடல் நலத்துக்கும் ஏகாதசி உபவாசம் நல்லது. அதன்பின் மறுநாள் குளிர்ச்சி தரும் நெல்லிக் கனி, அகத்திக்கீரை ஆகியவற்றைச் சாப்பிடும் போது உடம்பின் செரிமான உறுப்புகள் வலுவடைகின்றன. உணவையும், உறக்கத்தையும் துறக்க முன் வருவதால் உள்ளமும் வைராக்கிய பலன் பெறுகிறது.

சந்திரன் பூமியை ஒரு தடவை சுற்றி வர ஏறக்குறைய இருப்பத்து ஒன்பதரை நாட்கள் ஆகின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு திதி எனப்படும். ஒரு சந்திர மாதத்தில் 30 திதிகள் உள்ளன. அமாவாசையில் இருந்து பௌர்ணமி வரையில் உள்ள 15 திதிகள் சுக்ல பக்ஷம் (வளர்பிறை) எனப்படும். பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரையில் உள்ள 15 திதிகள் கிருஷ்ணபக்ஷம் (தேய்பிறை)

**– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.**

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநு ஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக் கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷியால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

எனப்படும். அமாவாசையன்று சூரியனும், சந்திரனும் ஒன்றாக உதித்து ஒன்றாக மறைகின்றன. அதிலிருந்து ஒவ்வொரு நாளும் 12 டிகிரி வீதம் சந்திரன் சூரியனில் இருந்து பிரிந்து செல்கிறது. நான்காவது நாள் அதாவது சதுர்த்தசியன்று சந்திரன் சூரியனிலிருந்து 36டிகிரி முதல் 18 டிகிரி வரை பின்னால் உள்ளது.

பதினொன்றாவது நாள் ஏகாதசியன்று சூரியனிலிருந்து 132 டிகிரி பின்னால் இருக்கிறது. மேற்கூறிய நாட்களில் சூரியனிலிருந்து 180 டிகிரியில் இருக்கிறது. மேற்கூறிய நாட்களில் சூரியனிலிருந்து சந்திரன் தொலைவில் விலகிச் செல்வதில் புவியீர்ப்பு சக்தி அதிகமாகிறது. அந்த சமயத்தில் எப்போதும் போல உணவு அருந்தினால் அது சரியாக செரிக் காது. ஆகையால் நமது முன்னோர்கள் அந்த நாட்களில் விரதம் இருக்கச் சொல்லி இருக்கிறார்கள்.

வைகுண்ட ஏகாதசியன்று சந்திரன் சூரியனுக்கு 135 டிகிரி பின்னால் இருக்கிறது. அன்று சூரியன் நடுவரைக்குத் தெற்கே மிக அதிகமான தூரத்தில் இருக்கிறான். அன்று புவியீர்ப்பு சக்தி மிக அதிகமாக இருப்பதால் உபவாசம் இருக்கிறோம்.

ஏகாதசியன்று விரதமிருந்தால் முதல் பத்து நாட்கள் உணவு உட்கொண்டு அதனால் உள்ளே சேர்ந்துள்ள கழிவுப் பொருட்கள் கரைந்து வெளி ஏறுகின்றது. பதினோராவது நாளான ஏகாதசி அன்று வயிறு சுத்தமாகிறது. அன்று செரிமானக் கருவிகளுக்கும் ஓய்வு கிடைக்கிறது. பின் நமக்கு வைட்டமின்கள் தேவைப்படுகின்றன. முக்கியமாக வைட்டமின் "ஏ" யும், "சி" யும் தேவைப்படும். ஆகவே தான், துவாதசியன்று வைட்டமின் "ஏ" சத்து நிறைந்த அகத்திக்கீரையையும், வைட்டமின் "சி" சத்து நிறைந்த நெல்லிக்காயையும் உணவுடன் சேர்த்துக் கொள்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் செய்ய வேண்டிய சூரிய நமஸ்காரமும், இருமுறை ஏகாதசியோடு தொடர்ந்து வருகிற துவாதசி உணவும், நம்முடைய கண்ணொளியைக் காத்து உடல் நலத்தைப் பேணி வருகின்றன.

(ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (குத்தாலம்)யினர் தொகுத்த இந்து சமயம் ஒரு விஞ்ஞானப் பார்வை என்ற நூலிலிருந்து)

தொடரும்....



# முருங்கை இலை

### பசி நன்கு ஏற்பட

நாள்தோறும் ஒரு முறை 200 மி.லி. கொதிக்கும் நீரில் ஒரு கைப்பிடி முருங்கை இலையைப் போட்டு இறக்கி, மூடி வைக்க வேண்டும். பின்னர் ஆறியவுடன் நன்கு வடிகட்டி அதில் சிறிது மிளகுப்பொடி, உப்பு, எலுமிச்சை ரசம் ஆகியவற்றை கலந்து உட்கொண்டால் செரிமான சக்தி உண்டாகும். செரிமானக் குழாயில் ஏதாவது கோளாறுகள் இருந்தால் நீங்கும்.

### குழந்தை பாக்கியம் உண்டாக

நாள்தோறும் ஒரு முறை ஒரு டீஸ்பூன் பசு நெய்யில் கைப்பிடி அளவு முருங்கைப்பூவைப் போட்டு பச்சை மணம் போகும்வரை நன்கு வதக்கி, 50 மி.லி. பால் கலந்து மிருதுவாக ஆகும் வரை வேகவைத்து கால் டீஸ்பூன் பனங் கற்கண்டு போட்டு ஆறியவுடன் உட்கொண்டால் ஆண்மை பெருகும். குழந்தை பாக்கியம் உண்டாகும்.

### தாய்மார்களுக்கு தாய்ப்பால் உண்டாக

தகுந்தளவு நீரில் கைப்பிடி அளவு முருங்கை இலை, 2 சிட்டிகை உப்பு கலந்து மிருதுவாக வேகவைத்து 4 அல்லது 5 மிளகுப் பொடி, கால் டீஸ்பூன் நெய் கலந்து நாள்தோறும் ஒரு முறை உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் குழந்தைக்கு தேவையான அளவு தாய்ப்பால் சுரக்கும்.

### அண்டம் அபிவிருத்தி ஆக

நாள்தோறும் ஒரு முறை முருங்கை இலையை விளக்கெண்ணெய் சேர்த்து மிருது வாக அரைத்து சூடு செய்து பூசிக் கொண்டு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு கழுவிக் கொண்டால் அண்டம் அபிவிருத்தி ஆகும்.

### அதிக சிறுநீர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த

நாள்தோறும் 2 முறை ஒரு வேளைக்கு 5–10 மி.லி. முருங்கை இலைகளை 2–3 சிட்டிகை சைந்தவ லவணம் பொடியைக் கலந்து உட்கொண்டால் இப்பிரச்சனை நீங்கும்.

### தலைவலி, கழுத்து வலி குறைய

முருங்கைஇலை இரசத்தில் 2–3 சிட்டிகை மிளகுப் பொடி சேர்த்து தலைவலி, கழுத்துவலி உள்ள இடத்தில் பற்றாகப் போட வேண்டும். இதன் மூலம் வலி குறையும்.

### கண் சம்பந்தப்பட்ட வியாதிகள் குறைய

100 மி.லி. கேரட் ரசம், 20 மி.லி. முருங்கை இலை இரசம், 5 மி.லி. தேன் இவற்றைக் கலந்து நாள்தோறும் ஒரு முறை உட்கொண்டால் கண் சம்மந்தப்பட்ட வியாதிகள் குறையும். மாலைக்கண் நோய் போன்றவையும் குறையும்.

### சுளுக்கு, காயங்களின் வலிகள் குறைய

தகுந்தளவு முருங்கை இலையை இடித்து சூடு செய்து சிறிது எலுமிச்சை இரசம் கலந்து தடவிக் கொண்டால் நல்ல பலன் உண்டாகும்.

### தோல் வியாதிகள் குணமாக

ஒரு பங்கு முருங்கை இலை இரசம், மூன்று பங்கு தேங்காய் எண்ணெய் உடன் சேர்த்து மிதமான சூட்டில் எண்ணெய்யாக மாறும் வரை சுண்டக் காய்ச்சி ஆறியவுடன் வடிகட்டி ஒரு கண்ணாடி பாட்டிலில் வைத்துக் கொண்டு நாள்தோறும் ஒரு முறை உடலில் தடவிக் கொண்டால் தோல் வியாதிகள், அரிப்பு போன்றவை குணமாகும்.

### குறிப்பு :

மருந்துகளை உபயோகிக்கும் முன் ஆயுர் வேத மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தரத் தீர்விற்கு அல்ல.

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156



திருமலை திருப்பதி
தேவஸ்தானம்



# "ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை"

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 08 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 15 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 15 இலட்சம் |
| | மொத்தம் | - 38 இலட்சம் |

0877-2263001
0877-2263472

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.38 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.8 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.15 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.15 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும். இந்த நன்கொடைத்தொகை 30.09.2024 வரை மட்டுமே அமலில் இருக்கும். பின்னர் நன்கொடைத்தொகை மாறுதலுக்குரியது.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

**துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் பிரிவு) எப்.ஏ.சி., தி.தி.தேவஸ்தானம், திருமலை, ஆந்திர மாநிலம்**

மின்னஞ்சல் : cdmc.ttd@tirumala.org
www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.



# ஜூன் 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகஸ்தர் களுக்குப் பதவி உயர்வு உண்டு. தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தொழிலில் அலைச்சல் காரணமாகத் தூக்கமின்மை ஏற்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நினைத்ததைச் சாதிக்கும் மாதமிது.

**ரிஷபம்**

மனக்குழப்பங்கள் தீரும். மாதத்தின் பிற்பகுதியில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு.மிகுந்த சிரமத்தின் பேரில் தொழில் துறையில் விருத்தி உண்டு. கடன் வாங்கி வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறும் மாதமிது.

**மிதுனம்**

மாதத்தின் முன் பாதியில் இருந்த விரயச் செலவுகள் பின்பகுதியில் குறையும். தாய்-தந்தையரின் ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் சரியாகும். தொழில் துறையில் அலைச்சல் இருந்தாலும் வளர்ச்சியும் கூடவே இருக்கும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். செலவுகளுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். கடுமையாக உழைத்து வெற்றி பெறும் மாதமிது.

**கடகம்**

காரியத்தடைகள் நீங்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த தனலாபம் கிடைக்கும். சகோதரனின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தோல்வியிலிருந்து மீண்டு வந்து வெற்றி பெறும் மாதமிது.

**சிம்மம்**

தொழில் துறையில் மாற்றங்கள் நிகழும். திருஷ்டி காரணமாக காரியத்தடைகள் ஏற்படும். பேசும்போது வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். தாய்-தந்தையரின் ஆதரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டிய மாதமிது.

**கன்னி**

தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். பாக்கிகள் வசூலாகும். குழந்தைகளின் கல்விக்காகச் செலவுகள் அதிகமாகும். சிலருக்குக் கல்விக்காகக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். சகல துறைகளிலும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும் மாதமிது.

**துலாம்**

பணவிஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும். கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது கணவன்-மனைவி இருவரும் சேர்ந்து முடிவு எடுக்கவும். அஜீரணம் ஏற்படுத்தக்கூடிய உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். உங்களை விட உங்கள் குடும்பத்தினருக்கு முன்னேற்றம் தரும் மாதமிது.

**விருச்சிகம்**

தொழில் போட்டியில் வெற்றியைப் பெறுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். தாய்-தந்தையரின் ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். பூர்வ புண்ணிய சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். பெண்களால் தன லாபம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ அருளுடன் முன்னேறும் மாதமிது.

**தனசு**

கடன் வாங்கி வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டு. பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். தாய்-தந்தையரின் ஆரோக்யம் நன்கு அமையும். கடன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனைவி மூலம் இருந்த செலவினங்கள் குறையும். பண விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**மகரம்**

தெய்வ பலத்தினால் சகல துறைகளிலும் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்கள் வில்லங்கம் இல்லாமல் வந்து சேரும். திருமணம் ஆகாதவர் களுக்கு திருமணம் கைகூடும். தொழிலில் நல்ல முன்னேற்றமும் வளர்ச்சியும் உண்டு. பணியாளர்களுக்கு விரைவில் பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்கள், எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**கும்பம்**

நண்பர்கள் உறவினர்களால் நன்மையுண்டு. சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். வாகனங்களில் இரவு நேரப் பயணங்களைத் தவிர்க்கவும். வேலைப் பளு அதிகரித்தாலும் அதற்குரிய சன்மானம் கிடைக்கும் மாதமிது.

**மீனம்**

குடும்பத்தில் சுப விரயங்கள் நடக்கும். குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழிலில் அலைச்சலுக்கு ஏற்ற வளர்ச்சியும் உண்டு. தைரியமாகக் காரியத்தைச் செய்து சாதித்துக் கொள்வீர்கள். மனைவியின் ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். வீட்டில் மருத்துவச் செலவுகள் குறையும். தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதமிது.



# இணைந்து வாழ்வோம்!

நீதிக் கதை

குடும்பம், அலுவலகம், தொழில் என எந்த இடத்திலும் வெற்றிக்குத் தேவை ஒற்றுமை. அந்த ஒற்றுமை எப்போது வரும்? ஒருவர் தான் பெறுவதை விட அதிகமாகக் கொடுக்கும் போது ஒற்றுமை வரும். தன் நலனை ஒதுக்கி வைத்து விட்டு அடுத்தவர்கள் நலனில் அக்கறை காட்டும் போது ஒற்றுமை வரும். அடுத்தவர்களுக்காக உழைக்கும் போது ஒற்றுமை வரும். தன் தனிப்பட்ட சாதனைகளை விடக் குழுவின் வெற்றியே முக்கியம் என நினைக்கும்போது ஒற்றுமை வரும்.

இப்படி அடுத்தவர்கள் நலனை நினைக்கும் எவரும் கொடுப்பதை விட அதிகமாகவே பெறுகிறார்கள். இதற்கு உதாரணமாக இந்தச் சகோதரர்களைச் சொல்லலாம். விவசாயக் குடும்பத்தில் பிறந்த அண்ணன், தம்பி இருவரும் தங்கள் குடும்பத்துக்குச் சொந்தமான நிலத்தில் இணைந்து விவசாயம் செய்தனர். இருவரும் ஒரே அளவுக்கு உழைப்பைக் கொடுப்பதால், விளைச்சலையும் லாபத்தையும் சமமாகப் பிரித்துக் கொண்டனர்.

அண்ணனுக்குத் திருமணமாகி 3 பிள்ளைகள் இருந்தனர். தம்பிக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை. ஆனாலும் அவர்கள் எல்லாவற்றையும் சமமாகவே பங்கிட்டனர். ஒரு நாள் தம்பிக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. "நான் தனியாக இருக்கிறேன். அண்ணனோ பெரிய குடும்பத்தை வைத்துக் கொண்டு சிரமப்படுகிறார். எல்லாவற்றிலும் நான் சம பங்கு வாங்குவது அநியாயம். என் ஒருத்தனுக்கு எதற்கு இவ்வளவு?" என்று நினைத்தான். அண்ணனுக்கு உதவி செய்யத் தீர்மானித்தான். தன் வீட்டில் இருந்து சில தானிய மூட்டைகளை இரவு நேரத்தில் ரகசியமாக எடுத்துக் கொண்டு போய் அண்ணன் வீட்டுக் களஞ்சியத்தில் வைத்தான். பணமும் கொண்டு போய் அண்ணனுக்குத் தெரியாமல் அவர் வீட்டு அலமாரியில் வைத்தான்.

அதே நேரத்தில் அண்ணனும் தன் தம்பியின் நிலையைப் பற்றி நினைத்தார். "எனக்கு குடும்பம் இருக்கிறது. மனைவியும் சம்பாதிக்கிறாள். குடும்பத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ள முடியும். ஆனால் தம்பி தனியாக இருக்கிறான். அவனுக்கு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும். நான் சரிபங்கு வாங்குவது தவறு" என்று நினைத்தான். இரவோடு இரவாகத் தம்பி வீட்டுக்குப் போய் தானியங்களையும் பணத்தையும் வைத்தான்.

இப்படியே இது தொடர்ந்தது. "நம் வீட்டில் பணமோ, தானியமோ குறைவதில்லையே" என்று இருவருக்குமே குழப்பம். ஆனால் யாரிடமும் கேட்க முடியாமல் தவித்தார்கள். ஒரு நாள் இரவு நேரத்தில் தானிய மூட்டையுடன் வரும் போது அண்ணனும் தம்பியும் ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டனர். அப்போதுதான் உண்மை தெரிந்தது. இருவரும் அன்பாக அரவணைத்துக் கொண்டனர்.




விட்டுக்கொடுக்கும்போதுதான் ஒற்றுமை ஊற்றெடுக்கும். எல்லோரும் இணைந்திருக்கும்போதுதான் ஒரு குடும்பம் முழுமை பெறுகிறது. இணைந்து செயல்படும்போதுதான் எதையும் சாதிக்கும் வலிமை கிடைக்கிறது. மகிழ்ச்சியும் நிலைக்கிறது.

– இரா. அமிர்த்தவர்ஷினி, புதுச்சேரி, 9500264265.




# பல்சுவை பகுதி




# சித்திரப் பகுதி















1) அனுமத் ஜெயந்தி
2) ஆனித் திருமஞ்சனம்
3) யோகா தினம்





*மேலே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*



## வார்த்தைகளைச் சரியாக எழுதி "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

அலாதன அழகு செய்யேல், கல் இளமையில், மறவேல் அரனை.

அழகு அலாதன செய்யேல், இளமையில் கல், அரனை மறவேல்.

சரியான பாதையைக் கண்டுபிடி



ஸ்ரீராமபிரான் அளித்த கணையாழியை எடுத்து வரும் அனுமனுக்கு சீதா தேவியிடம் சென்றடைய 1,2... 20 வரையிலான எண்களை இணைத்து பாதையைக் காட்டுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 3 | 4 | 13 | 14 | 15 |
| 1 | 2 | 15 | 12 | 13 | 14 |
| 4 | 3 | 12 | 11 | 20 | 15 |
| 5 | 4 | 9 | 10 | 19 | 16 |
| 6 | 5 | 8 | 19 | 18 | 17 |
| 7 | 6 | 7 | 17 | 19 | 18 |
| 8 | 9 | 10 | 16 | 20 | |
| 9 | 10 | 11 | 15 | | |






ஸ்ரீகாமகாய ஆலயம்,
கௌஹாதி,
சராய்காட் பாலம்
அமைந்துள்ள மாநிலம்...

அஸ்ஸாம்

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-23

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. குந்தி தேவி புதல்வர்களின் பெயர்.................................................................................
2. பிள்ளைப்பேற்றிற்காக தசரதன் தவம் மேற்கொள்ள சென்ற திருத்தலம்...............................................
3. சக்கரத்தாழ்வாரின் அம்சமாக அவதரித்த ஆழ்வார்.........................................................................
4. கும்பகர்ணனை அழிக்கத் திருமால் எடுத்த அவதாரம்......................................................................
5. ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்திரத்தை அருளியவர் ......................................................
6. திருக்கோட்டியூர் திருத்தலத்தில் இருக்கும் புஷ்கரணி.......................................................................
7. குந்தி தேவிக்கு சக்தி வாய்ந்த மந்திரத்தை உபதேசித்தவர்.................................................................
8. அஸ்தினாபுரத்தை ஆட்சிபுரிந்த திருதராஷ்டிரனின் தமையன்..........................................................
9. சாதுர்மாஸ விரதம் மேற்கொள்ளும் மாதம்.........................................................................................
10. மகாவிஷ்ணு இரண்யகசிபுவை அழிக்க எடுத்த அவதாரம்...................................................................
11. திருக்கார்வானம் திவ்யதேசம் அமைந்திருக்கும் மாநகரம் ...................................................................
12. இளையாழ்வார் என்று போற்றப்படும் ஆசாரியர் ................................................................................
13. திருமலையில் இருக்கும் புண்ணிய புஷ்கரணியின் பெயர்...................................................................
14. திருக்கார்வானம் திவ்யதேசத்தை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்......................................................
15. திருதராஷ்டிரனின் மனைவி பெயர்....................................................................................................

### போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati - 517 507'' என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.06.2024.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**சக்கரத்தைச் சுற்றுங்கள்! அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!**




1) இராம நாமம், 2) அனுமன், 3)சீதா பிராட்டி, 4) ஸ்ரீராமர்,
5) வெற்றிலை மாலை, 6)அஞ்சனா தேவி, 7)அனுமன், 8)சஞ்சீவி மலை.

**விடைகள்**



குழந்தைகளே!
பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன.
சாதனைகள் பல புரிய திருமலையப்பனின் ஆசிகள்.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் சித்திரத்தில் ஒரு தவறு உள்ளது. குழந்தைகளே! அதை என்னவென்று கண்டுபிடித்து கீழே உள்ள கட்டத்தில் எழுதி மகிழவும்.

பெண் குழந்தையின் காலணி

**விடை**



**ஒற்றுமையே பலம்!**


வலையில் சிக்கிய பறவைகள் ஒற்றுமையாகப் பறந்ததால் உயிர் பிழைத்தன.



# ஹரிநாமம் சோறு போடுமா(ம்)

சித்திரக் கதை

கதை மூலம் :திரு.ஸ்ரீநிவாசல தீக்ஷிதுலு
சித்திரம் :திரு. கே. துவாரகாநாத்




சிறிது நேரத்தில் கொள்ளையர்கள் சிலர் அங்கு வந்தனர். தாம் கொள்ளையடித்ததைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். திரும்பிச் செல்லும் போது அங்கிருந்த உணவு மூட்டையினைக் கண்டனர்.
காட்டிற்குள் உணவு இருப்பதைக் கண்ட கொள்ளையர்கள் சந்தேகத்தோடு சுற்றும் முற்றும் தேட, மரத்தின் மீதிருந்த வித்யாபதியைக் கண்டனர். அவனைக் கீழே இறக்கினர்.
இங்கு உணவு உள்ளதே! நம் எதிரிகள் யாராவது உணவில் நஞ்சினைக் கலந்திருப்பாரோ?
ஏய்! உணவில் நஞ்சினை கலந்துள்ளாயா? இவ்வுணவினை முதலில் நீ உட்கொள்.
நான் இப்பொழுது உட்கொள்ள மாட்டேன். இதில் ஏதும் நஞ்சு கலக்கப்படவில்லை என்றான் வித்யாபதி. கொள்ளையர்கள் வலுக்கட்டாயமாக வித்யாபதியை உணவு உட்கொள்ள வைத்தனர்.
வாருங்கள் செல்வோம்.
கொள்ளையர்கள் சென்றனர். பிறகு வித்யாபதி...
திருநாமத்தின் மகிமையை வருணிக்க இயலாது. அம்மகிமையே எனக்கு உணவினை அளித்தது. மகான்கள் கூறுவது உண்மையே!
வித்யாபதி மனம் மாறி இறைவனின் திருநாமத்தைத் துதித்து சன்மார்க்கத்தைக் கடைபிடித்தான்.
அனைவரும் இறைவனின் திருநாமத்தைத் துதியுங்கள்.
இறைவனின் திருநாமமே பக்திக்கும் முக்திக்கும் வழிகாட்டி. இது உறுதி.
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஒ./ஐ.எம்.ஒ./ஐ.பி.ஒ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஒ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2ஆம் தளம்,தி.தி.தே.அச்சகக்கட்டடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



21-04-2024 முதல் 23-04-2024 வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு வைபவமாக நடைபெற்ற வசந்தோத்ஸவத் திருக்காட்சி



21-04-2024 முதல் 23-04-2024 வரை திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிக்கு நடைபெற்ற தெப்போத்ஸவத் திருக்காட்சி



ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி திருக்கல்யாணத்தை முன்னிட்டு 22-04-2024 அன்று ஆ.மா. அரசு சார்பில் பட்டு வஸ்திரங்களை சமர்ப்பித்த ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை சிறப்புத் தலைமைச் செயலாளர் திரு.ஆர்.கரிகால வளவன் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி.தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.



ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி திருக்கல்யாணத்தை முன்னிட்டு 22-04-2024 அன்று திருவேங்கடவனின் பட்டு வஸ்திரங்கள் மற்றும் ஆபரணங்களைச் சமர்ப்பித்த தி.தி.தே. செயலாட்சித்தலைவருடன் இணைச்செயலாட்சித் தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், திருமதி எம்.கௌதமி ஐ.ஏ.எஸ். (எச்&இ) அவர்கள்



26-04-2024 அன்று திருவேங்கடமுடையானை தரிசித்த மேதகு இந்திய துணைக்குடியரசுத் தலைவர் திரு.ஜகதீப் தன்கர் அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி.தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



26-04-2024 அன்று திருப்பதியில் தி.தி.தே. பர்ட் மருத்துவமனை மற்றும் ஸ்ரீபத்மாவதி குழந்தைகள் இதய நல மருத்துவமனையைப் பார்வையிட்ட மேதகு ஆ.மா. ஆளுநர் திரு.அப்துல் நஜீர் அவர்களுடன் தி.தி.தே.இணைச்செயலாட்சித் தலைவர்கள் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், திருமதி எம்.கௌதமி ஐ.ஏ.எஸ். (எச்&இ) அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-05-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

